கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை

1-8-1972

30 காசு




உள்ளத்துச் செல்வம் வேண்டி
உலகச் செல்வம் உதறினார்



'ஸ்ரீநிவாஸ நாயக்' பிற்காலத்தில் மகான் புரந்தரதாஸராகி அமர வாழ்வு பெற வேண்டும் என்பது தெய்வக் கட்டளை. அவர் புகழ்பெற்ற வணிகர் குடியில் பிறந்தார். சிறுவயதில் அவரது வாழ்வின் ஆவேச உணர்வனைத்தும் பணம் சம்பாதிப்பதிலேயே இருந்தது. கடுமையாக உழைத்துப் பொருள் ஈட்டினார். ஆனால் ஏராளச் செல்வம் திரட்டிய பின்னரும் அவர் தம் அந்தரங்கத்திலே பெரிய சூனியம் இருப்பதாகவே கண்டார். பணத்தால் அந்தச் சூனியத்தை இட்டு நிரப்ப முடியவில்லை. அவரது ஆன்மா தெய்வீக ஆனந்தத்துக்காகத் தாகம் கொண்டது. கடைசியில் ஒரு நாள் அவர் விழிப்புப் பெற்றுவிட்டார். அவ்வளவு செல்வத்தையும் துறந்து, ஆண்டியானார். பௌதிக லாபத்துக்காக அதுகாறும் உற்சாகத்துடன் உழைத்தது போலவே இன்றிலிருந்து ஆன்மீகச் செல்வங்களுக்காக உழைக்கலானார். முடிவறியா அருவியாகப் பொழியும் பாடல்களில் தமது உள்ளத்தையே கொட்டினார். அவர் 4,75,000 கீர்த்தனங்கள் செய்ததாக நம்பப்படுகிறது. இவற்றில் 8,000 இன்றும் வழக்கில் உள்ளன. கர்நாடக சங்கீதத்தின் பீஷ்மபிதாமகரான அவர் தமது பாடல்களின் மூலம் புராண இதிகாசங்களைப் போதித்தார். அப்பாடல்கள் பல தலைமுறைகளாக, இன்றளவும், ஆண் பெண்களை மந்திர சக்தி போல் கவர்கின்றன; அவர்களுக்குப் பரமனின் பெருமையைத் தரிசனம் செய்விக்கின்றன.

மபத்லால் க்ரூப்

MAFATLAL GROUP



□

கோகுலம்

பரிதாபி, ஆடி 17
ஆகஸ்ட் 1, 1972
மலர் 1 :: இதழ் 8

□


அட்டைப்படச் சிறுமி:

'' ஆட்டுக்குட்டியைக் காணலியேன்னு
ஊர் பூராத் தேடிக்கிட்டிருந்தேன்.
கோகுலம் அட்டையைப்
பாத்தப்புறந்தான் தெரியுது, ஆட்டைத்
தோள் மேலேயே போட்டுக்
கிட்டிருக்கேன் அப்படீன்னு!''

வண்ணப் படம்: எஸ். ஆர். ராஜகோபால்



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்
— பாரதியார்



இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது சிறப்பாக விளையாடிய கிரிக்கெட் வீரர் சோல்கர் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் தன் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்

குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் இல்லாத நேரத்திலும் கூட உடலை தெம்புடன் வைத்திருப்பதன் அவசியத்தை சோல்கர் உணர்ந்திருக்கிறார். தினசரி பிலிப்ஸில் சவாரிசெய்ய அவர் தவறுவதில்லை. உலகப் பிரசித்தி பெற்ற பிலிப்ஸ் ஊக்க மிக்க வாலிபருக்கு இன்றியமையாதது. அது கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரி செய்யவல்லது.

இதர பிலிப்ஸ் மாடல்கள்:

பிலிப்ஸ் ஒலிம்பியா (சூப்பர் மாடல்)
பிலிப்ஸ் லேடீஸ் மாடல்
ஊக்கமிகு வாலிபர்கள் உவந்து வாங்குவது பிலிப்ஸ்





இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
டி.ஐ. சைக்கிள்ஸ்
ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை 53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெட்ன்ஸ்
ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை
பதிவுபெற்ற உபயோகிப்பாளர்கள்.

TICPH/7020



ஆத்திசூடி

ராஜாஜி

இளமையிற் கல்

சிறு வயதிலேயே கற்றுக் கொள்ள வேண்டியதை யெல்லாம் கற்றுக்கொள். இளமை தீர்ந்த பின் கல்வி கற்பது மிகவும் கஷ்டம். தேக பலத்தைக் கொண்டு தொழில் செய்து பிழைக்கும் தொழிலாளரும் கூடத் தம் மக்களுக்கு இளம் பிராயத்தில் கல்வி கற்பிக்க வேண்டும்.

அறனை மறவேல்

அறனை : அறத்தை, தருமத்தை, அதாவது செய்ய வேண்டிய கடமையை-மறவேல் : மறக்காதே.

செய்ய வேண்டிய கடமையை மறந்து விடப் பல காரணங்கள் வந்து சேரும். ஆனால் அவ்வாறு மறக்கக் கூடாது.

அனந்த லாடேல்

அனந்தல் -- கள் குடித்து வரும் பொய் — களிப்பும்,, மயக்கமும், வெறி யாட்டமும். கள் குடித்தல் கூடாது. இது பழைய உரை. இந்த ஆத்திசூடியைப் பற்றி வேறு விதத்தில் சொல்லலாம். பாம்புடன் மந்திரம் தெரியும் என்று நினைத்து விளையாட வேண்டாம். அது அபாயத்தில் முடியும். இதன் உட் கருத்து என்னவென்றல் பாப எண் ணங்களுடன், பாபம் முற்றுவதற்குள் தடுத்துக் கொள்வேன் என்று நம்பி விளையாட வேண்டாம். பாபம் முற்று வதற்குள் தடுத்துக் கொள்ளும் பலம் எனக்கு இருக்கிறது என்று அபாயத் தைத் தருவித்துக் கொள்ள வேண்டாம். பாபத்தில் முடியும்.

கடிவது மற

கடிவது — கோபித்துக் கொள்ளும் வழக்கத்தை மற — மறந்துவிடு. அதாவது கோபம் கொள்ளும் வழக்கத்தை நீக்கிக் கொள்ள அப்பியாசம் செய்ய வேண்டும்.

காப்பது விரதம்

எதைக் காக்காமலிருந்தாலும் நீ ஒரு விரதத்தை எடுத்துக் கொண்டால் அதைத் தவறக் கூடாது.


காப்பது — காக்க வேண்டியது.

விரதம் — இந்த நல்ல காரியத்தைச் செய்வேன், இந்தத் தீய காரியத்தைச் செய்யமாட்டேன் என்று தீர யோசித்து மனத்தில் நிச்சயம் செய்து கொள்வது. இப்படித் தீர்மானித்தால் அதை எந்தத் தடைவந்தாலும் காப்பாற்ற வேண்டும்.

கிழமைப்பட வாழ்


கிழமை — உரிமை

எல்லாரும் உன்னிடம் உரிமை கொண்டாடுமாறு வாழ். பிறருக்கு உன் மேல் வெறுப்பு, சந்தேகம், பயம், இவை உண்டாகாமல் அன்பு உண் டாகுமாறு நடந்து கொள்.



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்



பூதனை மாண்டு மலை போல் மண்ணில் கிடந்தாள். சின்னஞ் சிறு பாலகனாகிய கண்ணன் அவள் உடம்பின்மீது விளையாடினார். இதைக் கண்ட யசோதையும் ஏனைய கோபிகையரும் அஞ்சினர். கோபாலனை எடுத்து உச்சி மோந்து, லோக ரட்சகனாகிய அப் பரமபதிக்கு ஆபத்து வராமல் இருக்க ரட்சா பந்தனம் செய்தார்கள்; திருஷ்டி கழித்தார்கள்.

''என் அருமை மகனே! உன்னைக் கொல்லக் கொடிய அரக்கி வந்தாள் போலும். தெய்வத் திருவருளால் அவள் மாண்டாள். நீ பிழைத்தாய். உன்னைத் தெய்வம் ரட்சிப்பதாக'' என்று கூறி வாழ்த்தினார்கள்.

நந்தகோபன் முதலியோர் அவளுடைய உடம்பைப் பல துண்டங்களாக வெட்டி அடுத்துள்ள வனத்தில் வைத்து எரித்தார்கள். அவளுடைய உடம்பு எரிகின்றபோது, பகவானுடைய பாதம் பட்டதனால் கஸ்தூரி மணம் வீசியது. பரமபதி முலைப்பால் உண்டதனால் அப் பாதகியும் முக்தி பெற்றாள்.

கண்ணனுக்கு ஓராண்டு நிறைந்தது. அன்று அவர் பிறந்த நட்சத்திரம். யசோதை குழந்தை பிறந்த நாளைச் சிறந்த முறையில் கொண்டாடினாள். வீட்டை அலங்கரித்தாள். சந்தனத்தால் மெழுகினாள். பூமாலைகள் தொங்க விட்டாள். வறியவர்கட்கு அன்னமும் ஆடையும் வழங்கினாள். கோபிகையரையும் கோபாலர்களையும் அழைத்து நல்லுணவிந்தாள். இன்சொல் கூறி மகிழ்ந்தாள்.

யசோதையின் இல்லத்தில் தோல் கருவி, தொளைக் கருவி, மிடற்றுக் கருவி என்ற பக்கவாத்தியங்களும் இனிது முழங்கின.

சகடாசுரன்

யசோதை கண்ணனுக்குத் திருமஞ்சன நீராட்டினாள். சகல அணிகலன்களைப் பூட்டினாள். தன் பொன் மாளிகைக்கு முன்னே கண்ணனைக் தொட்டிலில் இட்டுத் தாலாட்டினாள்.

மாதவத்தால் வந்துதித்த
  மணிவிளக்கே யாதவர் தம்
நிதகல வந்த திருமணியே
  கண்வளராய்!
தெள்ளமுதே! இதழ மெல்லத்
  தித்திக்கும் செங்கரும்பே!
பிள்ளைகலி நீங்க வந்த
  பெருமானே! கண்வளராய்!
தண்ணுர் முழுமதியே!
  தாமரை நாபனே!
கண்ணு! மணி கண்ணு!
  கனியமுதே கண் வளராய்!

என்று பாடினாள்.

எம்பெருமான் . கண் மூடித் துயில்வான்போல் கண்ணயர்ந்தான்.

கம்சன் கண்ணனைக் கொல்ல ஒரு கொடிய அரக்கனை ஏவினான். அவன் ஒரு வண்டியின் வடிவம் தாங்கி வந்தான். ''வண்டி ஏறிக் குழந்தை மாண்டது என்று உலகம் உரைப்பதாக'' என்று கருதிக் ''கிடுகிடு'' என்று வண்டி வேகமாக உருண்டோடியது.

அகட விகடமுடைய அரக்கன் சகட வடிவம் கொண்டு வேகமாகத் தம்மைக் கொல்ல வருவதைக் கண்ணபிரான் திருவுள்ளத்தில் அறிந்தார். பசியினால் அழுவார் போல் வீறிட்டுக் கதறி அழுதார். சகடாசுரன் அருகில் வந்தவுடனே வேதமும் காணாத பாத பங்கயத்தால் அவனை உதைத்தருளினார். வண்டி முறிந்தது. சகடாசுரன் மாண்டான்.

வண்டி முறிந்த ஓசை கேட்டு நந்தகோபனும் மற்றைய ஆயர்களும் ஆயர்களும், யசோதையும் ஓடி வந்து பார்த்

தார்கள். மிகப் பெரிய வண்டி முறிந்து கிடப்பதைக் கண்டார்கள். அச்சம் கொண்டார்கள். 'இத்துணை பெரிய வண்டி இங்கே எப்படி வந்தது? இது எவ்வாறு முறிந்தது?' என்று ஐயுற்றுக் கேட்டனர். அருகில் இருந்த ஆயச் சிறுவர்கள், ''மன்னவரே! இந்த வண்டி மலை போலே உருண்டு வந்தது. நாங்கள் நடுநடுங்கி நின்றோம். இந்தக் குழந்தை உதைத்தது. வண்டி சிதைந்து வீழ்ந்தது'' என்றார்கள்.

கண்ணனைக் கடவுள் என்று அறியாத அந்த ஜனங்கள் அதிசயமடைந்தார்கள். ''யாரோ ஓர் அரக்கன் தான் சகட வடிவாக வந்தான் போலும். தெய்வம் காத்தருளியது'' என்று கூறினார்கள். யசோதை கண்ணனை எடுத்து மார்புற அணைத்துக் கொண்டாள். ''ஆயர் குலம் தழைக்க வந்த அருமருந்தே! தூயமணி விளக்கனைய உன்னைக் கொல்லத் தீயவர்கள் பலர் இருக்கின்றார்கள் போலும் கண்ணா! உன்னைத் தெய்வம் காத்தருளியது. (கண்ணனே கடவுள் என்று அவளுடைய பேதையுள்ளம் உணரவில்லை) உன் திருமேனியை நாராயணன் காப்பாராக'' என்று கூறினாள்.

மந்திரம் தெரிந்த அந்தணர்களை அழைத்துச் செந்தழல் ஓம்பிக் குழந்தைக்குப் பரிகாரம் செய்தாள். யாக ரட்சையை நெற்றியில் இட்டாள். ஆரத்தி எடுத்துக் கண்ணேறு கழித்தாள்.

திருணாவர்த்தன்

ஒருநாள் யசோதை கண்ணபிரானை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். குழந்தையின் திருமேனி கனமுற்று மடிமிசை தாங்க மாட்டாமல் நிலத்தில் விட்டாள்.

கம்சனால் கண்ணனைக் கொல்லும் பொருட்டு ஏவப்பட்ட திருணாவர்த்தன் என்ற கொடிய அரக்கன் சூறாவளிக் காற்று வடிவம் கொண்டு வந்தான். மண்ணும் விண்ணும் புழுதி பரவியது. எல்லோருடைய கண்களும் புழுதியால் துன்புற்று மூடப்பெற்றன.

திருணாவர்த்தன் சுழற்காற்று வடிவில் வந்து குழந்தையை எடுத்துக் கொண்டு ஓடினான்.

அண்டங்களையெல்லாம் தாங்குகின்ற கொண்டல் வண்ணன் தம் சிறிய வடிவை மேரு மலை போல் கனமாகச் செய்தார். அசுரன் குழந்தையின் பாரத்தைத் தாங்க மாட்டாமல் தவித்தான். அவனுடைய கண்கள் பிதுங்கின; எலும்புகள் ஒடிந்தன. நாவை நீட்டிக் கொண்டு காட்டில் வீழ்ந்து திருணாவர்த்தன் மாய்ந்தான்.

புழுதிப் படலத்தால் ஒன்றும் தெரியாமல் தவித்த யசோதை கைகளால் தடவிப் பார்த்தாள். குழந்தையைக் காணாது அழுதாள். புழுதி அடங்கியது.

நந்தகோபன் முதலியோர் ''கண்ணன் எங்கே? கண்ணன் எங்கே?'' என்று அங்கும் இங்கும் ஓடினார்கள். நான்கு திசைகளிலும் நாடினார்கள். உள்ளம் வாடினார்கள். அடுத்துள்ள கானகத்தில் தேடினார்கள். அங்கே அரக்கன் மாய்ந்திருப்பதையும், அவன் உடம்பில் கண்ணன் திருவடி வைத்து விளையாடிக் கொண்டிருப்பதையும் கண்டார்கள்.

'ஓ!' என்று அலறி ஓடிக் குழந்தையை எடுத்துக் கொண்டார்கள். யசோதையிடம் கொடுத்து நிகழ்ந்ததைக் கூறினார்கள். யசோதை மிகுந்த வேதனை அடைந்தாள். மீளவும் சுவாமிக்கு ரட்சா பந்தனம் செய்தாள்.



நவக்கிரக நாயகர்கள்

புராதன கிரேக்க நாகரிகமும் இலக்கியமும்தான் மேலை நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு அஸ்திவாரமாகும். கிரேக்கர்கள் நம்மைப் போலவே கலாசாரப் பெருமை மிக்கவர்கள். அவர்களுடைய கடவுளைப் பற்றிச் சுவையான வரலாறுகள் பல உண்டு.



ப்ளூடோ

இறந்தவர்களின் இருப்பிடமான பாதாள லோகத்துக்கு அதிபதி ப்ளூடோ. தங்கள் வாழ்நாளின் முடிவில் 'ஹேடஸ்' என்ற கீழ் உலகத்துக்குப் போகவேண்டி இருக்கும் என்பதினால் மனிதர்கள் ப்ளூடோவைப் பயபக்தியோடு வழிபட்டார்கள். ப்ளூடோவிடம் ஒரு மந்திரக் கிரீடம் உண்டு. அதை அணிந்தால் யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து விடலாம். ப்ளூடோ இந்தக் கிரீடத்தைத் தமக்கு விருப்பமானவர்களுக்கு . மனமுவந்து கொடுப்பார். இவர் தம் ராஜ்யத்தை ரொம்பக் கண்டிப்பாக ஆண்டு வருவார். ஆனால் நேர்மை தவறுமலும் ஆட்சி புரிவார். பிறரிடமிருந்து யோசனைகள் எதையும் இவர் விரும்புவதில்லை. அப்படி யார் கூறினாலும் வெறுக்கக் கூடியவர் — விண்ணுலகின் வேந்தரான இவருடைய சகோதரர் ஜூபிடரே ஆனாலும்கூட !

பூமித் தாயான ஸெரஸின் மகள் பெர்ஸபோனி. ஒரு நாள் இவள் வசந்த காலத்து வண்ண மலர்களோடு விளையாடிக் கொண்டிருந்தாள். ப்ளூடோ இதைப் பார்த்தார். அவள் அழகில் மயங்கினார். அவளைத் தம்முடையவளாக்கிக் கொள்ள முடிவு செய்தார். பெர்ஸபோனி உதவிக்குக் கூவி அழைக்கு முன் அவளைத் தூக்கிக் கொண்டு தம்முடைய பாதாள உலகத்துக்குக் கொண்டு போய்விட்டார் ப்ளூடோ. பெர்ஸபோனி தன் தாயாகிய ஸெரஸை நினைந்தபடி உண்ணவும் மறுத்து அழுது கொண்டேயிருந்தாள்.

பூமித் தாய் ஸெரஸ் தன் மகளைப் பூலோகமெல்லாம் தேடி அலைந்தாள். எங்கும் கிடைக்கவில்லை. முடிவில் அவள் இருக்குமிடம் அறிந்து, ப்ளூடோவிடமிருந்து தம் மகளை மீட்டுத் தருமாறு ஸெரஸ் ஜூபிடரிடம் மன்றாடினாள்.

பெர்ஸபோன் பாதாள உலகில் தங்கி யிருந்த நாட்களில் எதுவுமே உட்கொள்ளாமல் உண்ணாவிரதம் இருந்திருப்பாளானால் ப்ளூடோ அவளை அவளுடைய அன்னையிடம் அனுப்பிவிட வேண்டும் என்று ஆணையிட்டார் ஜூபிடர். ஆனால் அந்தோ, பாவம்! பெர்ஸபோனி அவர் ஆணையிடுவதற்குச் சற்றுமுன்புதான் நான்கே நான்கு தானியங்களை வாயில் போட்டுக் கொறித்திருந்தாள். ஆகவே, அவள் ப்ளூடோவின் ராணியாக ஆண்டில் நான்கு மாதங்கள் கீழ் உலகில் இருக்க வேண்டியதாயிற்று. இந்த ஏற்பாட்டினால் காலப் போக்கில் ப்ளூடோவைத் தன் கணவனாக மதித்து மரியாதையும் அன்பும் செலுத்தி மகிழ்ச்சியாக வாழலானாள் பெர்ஸபோனி.

பூமித்தாய் (ஸெரஸ்)

பூமியின் அதி தேவதை ஸெரஸ். பெர்ஸபோனியின் அம்மா. உழவுக்கும் அறுவடைக்கும் உரிய தேவதை ஸெரஸ். 'டிராகன்' என்ற விநோதமான விலங்குகள் பூட்டிய தேரில் வயல்வெளிகளில் ஸெரஸ் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சிவப்பு நிறமான பாப்பி மலர்களால் ஆன கட்டியை நெற்றியைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருப்பாள் பூமித் தாய். தான் மகிழ்ச்சியாக இருப்பதைப்போல் பூமியிலுள்ள மக்கள் எல்லாரும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று விரும்பினாள் ஸெரஸ். ஆகவே வருஷத்தின் எல்லா மாதங்களுமே சுபிட்சமாக வசந்த காலமாகச் செய்திருந்தாள்.

ஆனால் இந்த ஏற்பாடு நிலைத்து நடக்கவில்லை. அருமைப் பெண் பெர்ஸபோனியை இழந்ததும் எல்லாமே மாறி



விட்டது. மகளைத் தேடி அலைந்தபோது பூமி எங்கும் பொட்டலாயிற்று. தானியங்கள் பயிரிடப்படவில்லை. பயிர் பச்சைகள் செழிக்கவில்லை. அறுவடையும் இல்லை. மனிதன் முதன் முதலாக மாரிக் காலத்தின் வேதனையை உணரலானான். பெர்ஸெபோனி திரும்பியபின் ஸெரஸ் மகிழ்ச்சி அடைந்தாலும், ப்ளூடோவுடன் போய் வாழ நான்கு மாதங்கள் மகளைப் பிரிந்திருக்க வேண்டி இருந்தபோது அவள் துக்கம் திரும்பியது. ஒவ்வோர் ஆண்டும் மகளைப் பிரியும் இந்த வேதனை மாரிக் காலமாகப் பூமியை வந்தடைந்தது.

தாயுடன் தங்குவதற்குக் கீழ் உலகிலிருந்து மகள் பூமிக்கு வரும் போது பூக்கள் மலரும், கருமையான மண்ணிலே விதைகளிலிருந்து முதல் முளை கிளம்பும். நீண்ட மாரிக் காலம் முடிந்து, வசந்தம் வரப் போகிறது என்று மக்கள் மகிழ்ச்சி கொள்ளுவார்கள், ஸெரஸ் தம் மகளைக் கண்டு மகிழ்வதைப் போல்.

சாடர்ன் (சனி)

விதைத்தல், அறுவடை செய்தல் ஆகிய உழவுத் தொழிலோடு தொடர்புடைய இன்னொரு கடவுள் க்ரோனஸ். ஸெரஸின் தந்தை இவர். ரோமானியர்கள் இவரை சாடர்ன் என்று அழைத்தார்கள். கிரேக்க மொழியில் க்ரோனஸ் என்றால் 'காலம்' என்று பொருள். இந்தக் கடவுளை உருவகப்படுத்தும் போதெல்லாம் அறுவடை செய்யப் பயன்படும் வளைந்த அரிவாளைக் கையில் வைத்திருப்பதாகவே சித்திரிப்பார்கள். இவரே ஆங்கிலத்தில், 'ஓல்டு ஃபாதர் டைம்' என்றும் அழைக்கப்படுபவர்.



லத்தின் மொழியில் 'சாடர்ன்' என்றால் விதைக்க(ச் செய்) என்று பொருள். சாடர்னுக்கு ஸெரஸ் என்ற மகளைத் தவிர வேறு பல குழந்தைகளும் உண்டு. நெப்டியூன், ப்ளூடோ, ஜூபிடர் ஆகியவர்களும் சாடர்னின் மக்கள்தாம்.

ரோமானியர்கள் டிசம்பர் மாதம் 17ந் தேதி சாடர்னைக் கௌரவிக்க ஒரு விழா நடத்துவார்கள். இதற்கு ஸாடர்னேலியா என்று பெயர். இந்தச் சந்தர்ப்பத்தில் பழைய விரோதம் மறக்கப்படும், குற்றவாளிகள் தண்டிக்கப் படமாட்டார்கள். மிகக் கேவலமான அடிமைக்கும் அப்போது விடுமுறை வழங்கப்படும். இந்த விழா பல நாட்கள் நீடிக்கும். விருந்தும் கேளிக்கையும், தொடரும். பல்வேறு மதச் சடங்குகள் நிகழும். எல்லாம் சாடர்னுக்கு நன்றி தெரிவிப்பனவாகவே இருக்கும். வரும் ஆண்டிலும் கழனிகள் கொழிக்கவும், தானியக் கிடங்குகள் நிரம்பவும் மக்கள் சாடர்னிடம் அருள் பாலிக்க வேண்டுவார்கள்.

மார்ஸ் (செவ்வாய்)

யுத்தகளத்துக்கு உரிய தேவதை மார்ஸ். ஜூபிடருக்கும் ஜூனோவுக்கும் பிறந்தவர் இவர். ரோமானியர்களின் இதிகாசப்படி ரோமுலஸ், ரோமஸ் என்ற இரட்டையர்களின் தகப்பனார் மார்ஸ். ரோமுலஸ், ரோமஸ் இருவரும் தான் ரோம் நகரை ஸ்தாபித்தவர்கள். ஆண்டின் மூன்றாவது மாதமான 'மார்ச்' இவருடைய நினைவாக வைக்கப் பட்டது. செவ்வாய்க்கு ஏராளமான




கோயில்கள் எழுப்பப்பட்டன. ரோம சாம்ராஜ்யத்தில், போர்வீரர்களின் தாயாரும் மனைவிகளும் இக்கோயிலுக்கு வந்து 'மார்ஸ்' தேவதைக்குப் படைய விடுவார்கள். யுத்தகளத்துக்குப் போயிருக்கும் தங்கள் குடும்பத்து ஆண்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்படாமல் அவர்களைக் காப்பாற்றி வீடு சேர்க்குமாறு வேண்டிக் கொள்ளுவார்கள்.

யுரானஸ்

கிரேக்கக் கடவுளர்களுக்குள்ளேயே பழைமையானவரும் வானுலகத்துத் தெய்வங்களுக்குள்ளே மூத்தவரும் இந்த யுரானஸ்தான். அவரது மனைவியின் பெயர் கியா. பூமண்டலத்தில் ஆட்சி செலுத்தி வந்தாள் கியா. பூமியிலுள்ள மக்களுக்கு வெளிச்சம், உஷ்ணம், மழை ஆகியவைகளை வழங்கி வாழ வைத்தார் யுரானஸ். இவ்விருவருக்கும் பிறந்த பல குழந்தைகள் கடவுளர்களாக விளங்கினார்கள். சைக்ளாப்ஸ், டிடான் போன்றவர்கள் இவரது குழந்தைகள்தாம்.

ஒரு நாள் கியா யுரானஸுடன் சண்டையிட்டுக் கொண்டு மகன் சாடர்னை விட்டுத் தகப்பனைக் கொல்லும்படி தூண்டினாள். யுரானஸ் இறந்ததும் அவரது உதிரத்திலிருந்து புதிய குழந்தைகள் உற்பத்தியானார்கள்.




நெப்டியூன்

டிடானியர்களைத் தோல்வியுறச் செய்யத் தேவ தேவனை ஜுபிடருக்கு உதவியதனால் கடல் அரசனாக முடி சூட்டப்பட்டார் நெப்டியூன். இவரது கையில் திரிசூலம் இருக்கும். இவருக்குப் பிடிக்காதவர்களின் கப்பல் கடலில் மிதந்து வருமானால் நெப்டியூன் தமது சூலத்தினால் கடல் நீரில் திடீரென்று புயலை உருவாக்கி அந்தக் கப்பலைக் கவிழ்த்து விடுவார். டிராய் நகர வேந்தன் ஒரு தடவை தான் வாக்களித்தபடி நடக்கவில்லை. டிராய் நகரத்துக் கோட்டைச் சுவர் எழுப்பும் பணியை நெப்டியூனிடம் ஒப்படைத்தான் மன்னன். ஆனால் அந்தக் காரியத்துக்கான ஊதி



யத்தைக் கொடுக்க மறுத்தான். ஆகவே கடல் அரசனை நெப்டியூன் ட்ரோஜன்களுக்கு எதிராகக் கிரேக்கர்களுடன் சேர்ந்து கொண்டு பழி வாங்க முனைந்தார். ட்ராய் நகரின் அழிவுக்கு வழி வகுத்துக் கொடுத்தார் நெப்டியூன். புகழ்பெற்ற பொம்மைக் குதிரையை உருவாக்கித் தந்தது நெப்டியூன்தான். இது எல்லோராலும் பாராட்டப்பட்டது. குதிரைப் பந்தயக்காரர்களுக்கும் ஏழு கடலில் பிரயாணம் செய்பவர்களுக்கும் உகந்த கடவுள் நெப்டியூன்.

(இன்னும் மூன்று தேவதைகளைப் பற்றி அடுத்த இதழில்)



சிட்டு!

புளியங்குடி ச. ஆ. கேசவன்

சின்னச் சின்னச் சிட்டே வா!
சிறகடித்துக் கிட்டே வா!
அன்ன நடை போட்டே வா,
அச்சந் தன்னை விட்டே வா!

பட்டு மேனி தூக்கி வா,
பைய என்னை நோக்கி வா!
பட்ட ஐயம் நீக்கி வா,
பத்தி ரமா யிருக்க வா!


சின்ன அலகால் கொத்தி வா,
சிறிய காலால் தத்தி வா!
சன்னக் குரலால் கத்தி வா,
சந்தோ ஷமாய்ச் சுற்றி வா!

கந்தன்

எ. ந. கணபதி

கந்தன் எங்கள் கந்தனும்
செந்தில் வாழும் கந்தனும்
புள்ளி மயில் மீதிலே
துள்ளி வரும் கந்தனும்
சூர பத்மன் கொடுமையை
வேர றுத்த கந்தனும்
கூவும் சேவல் தன்னையே
கொடி பிடித்த கந்தனும்
வடி வழகன் கந்தனும்
வள்ளி மண வாளனும்
சேவல் கொடி வீரனும்
தேவ யானை கணவனும்
குன்றின் மீது ஏறியே
கோவில் கொண்ட கந்தனும்
வேல் பிடித்துத் துயர்களை
வேர் அறுக்கும் கந்தனும்
அன்பு செய்யும் பக்தரை
ஆத ரிக்கும் கந்தனும்!





யானை

டி. ஆர். குருஸ்வாமி

ஆனை வருது ஆனை வருது
அடுத்த தெருவிலே
ஆனை பார்க்கக் கும்பல் வருது
இந்தத் தெருவிலே.

ஆனை வருது ஆனை வருது
அடுத்த தெருவிலே
ஆனை மணி யோசை வருது
அருகில் அருகிலே!

ஆனை தின்னத் தீனி வருது
ஆட்கள் தலையிலே
ஆனை கட்டக் கயிறு வருது
ஆனை முதுகிலே.

அகராதி மனிதர்




ஓர் ஆங்கில வார்த்தைக்குப் பொருள் தெரியாவிட்டால் என்ன செய்கிறோம்? உடனே டிக்ஷனரி (அகராதி)யை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறோம். இப்படி ஆங்கில மொழியிலுள்ள எல்லா வார்த்தைகளுக்கும் பொருள் தரும் அகராதியை முதன் முதலில் உருவாக்கியது யார் தெரியுமா? **சாமுவேல் ஜான்ஸன்** என்பவர் தான். லண்டனில் பிரபலமான ஒரு தெரு ப்ளீட் தெரு. அந்தத் தெருவின் ஒரு திருப்பத்தில் கௌ ஸ்குயர் என்று ஓர் இடம். அங்கு இன்றும் ஒரு பழங்காலத்திய வீடு இருக்கிறது. உலகப் போரின் போது குண்டுகளால் கொஞ்சம் சேதமடைந்த நிலையில் அதை அப்படியே வைத்திருக்கிறார்கள். இதுதான் மேதை சாமுவேல் ஜான்ஸனின் இல்லம். இருநூறு வருஷங்களுக்கு முன் அந்த இல்லத்தில்தான் அவர் வாழ்ந்து வந்தார்.

ஜான்ஸன் இளமையிலேயே சூடிகையாக விளங்கினார். பள்ளியில் படிக்கும்போது தினமும் ஒரு மாணவன் அவரைச் சுமந்தபடி பள்ளிக்குப் போவான். வேறு இருவர் அவர் பேச்சை ரசித்தபடி வருவார்கள். ஜான்ஸனுக்கு நடக்க முடியாதா? அவர் கால் ஊனமில்லை. அப்படியானால்? பையன் ஜான்ஸனின் பேச்சைக் கேட்பதிலும் அவன் நட்பைப் பெறுவதிலும் சக மாணவர்களுக்கு அப்படியோர் ஆவல். அவனைச் சுமந்து செல்வதையே கூடப் பெருமையாக நினைத்தார்கள்.

ஏராளமாகப் படிப்பார் ஜான்ஸன். எப்போதும் படித்துக் கொண்டே இருப்பார். கல்லூரியில் சக மாணவர்கள் அவருடைய அறிவாற்றலைக் கண்டு பிரமித்துப் போவார்கள். ஆனால் ஏழைமை அவரை வாட்டியது. ஆக்ஸ்போர்டில் பயிலும்போது பணக்கார மாணவர்கள் இவரது தேய்ந்து போன பூட்ஸைப் பார்த்துக் கேலி செய்யவே, இவர் ஆக்ஸ்போர்டை விட்டு லிச்பீல்டுக்குத் திரும்பினார். இவர் பிறந்தது இங்குதான். 1709ம் ஆண்டு செப்டம்பர் 18ந் தேதி பிறந்தார் ஜான்ஸன். லிச்பீல்டுக்கு வந்த பிறகு ஜான்ஸன் சொந்தமாக ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தினார். ஆனால் அது வெற்றி பெறவில்லை. ஏனென்றால் ஜான்ஸன் முன்கோபக்காரர். பொறுமை இல்லாதவர். ஆகவே மாணவர்களைச் சமாளிக்க முடியவில்லை. 1737ம் ஆண்டு கையில் இரண்டரை பென்னிகளுடன் லண்டனுக்கு வந்தார், அதிர்ஷ்டத்தைத் தேடி.

செய்து பாருங்கள்

பறக்கும் பலூன்



சென்ற இதழில் பாராசூட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிப் படித்தீர்களில்லையா? அதில் ஆதியில் பலூனிலிருந்து பாராசூட் மூலம் குதித்ததாக வருகிறதே, அந்தப் பலூனை நீங்களே செய்து பார்க்கலாம். இடது பக்கத்தில் உள்ளது போலப் ப்ரௌன் பேப்பரில் பெரிய அளவில் வரைந்து கொண்டு வெட்டிக் கொள்ளுங்கள். இப்படி ஆறு துண்டுகளை வெட்டிக் கொண்டு இவைகளை 'அட்ஹெஸிவ் டேப்' கொண்டு ஒன்றோடு ஒன்றைச் சேர்த்து இணைத்தால் பலூன் கூண்டு உருவாகிவிடும். ஒரு வட்டமான காகிதத்தைக் கூண்டின்மேல் பக்கத்தில் ஒட்டுங்கள். இனி மெல்லிய கம்பி கொண்டு வளைத்துக் கூடை போலச் செய்து கொள்ளுங்கள். பலூன் வாய்ப் பகுதியின் அளவுக்குக் கூடையின் மேல் பாகம் இருக்க வேண்டும். கூடையைப் பலூனின் வாயோடு அட்ஹெஸிவ் டேப்பினால் இணைத்து விடுங்கள். கூடையின் அடியில் ஒரு தகர டப்பாவின் மூடியை வையுங்கள். காட்டன் வேஸ்ட்டை ஸ்பிரிட்டில் நனைத்து மூடியில் வைத்துக்








இலக்கியக் கட்டுரைகள் எழுதியும், பார்லிமெண்ட் விவாதங்களைக் கேட்டுப் பத்திரிகைகளுக்கு அவற்றைச் செய்தியாக்கிக் கொடுத்தும் பத்து வருஷங்கள் ஓட்டினார். இந்தக் காலத்தில்தான் இவர் அகராதி தயாரிப்பதில் ஈடுபட்டார். 1755ல் தம்முடைய மகத்தான தயாரிப்பான ஆங்கில அகராதியை வெளியிட்டார். பேச்சிலோ விவாதங்களிலோ ஜான்ஸனை யாராலும் வெல்ல முடியாது. அந்தக் காலத்தில் பிரபலமாக விளங்கிய பலர் ஜான்ஸனின் உரையாடல்களைக் கேட்கவும், விவாதங்களில் கலந்து கொள்ளவும் 'காப்பி அருந்தும் இல்லங்'களில் கூடுவார்கள். அப்படி வந்தவர்களில் ஒருவர்தான் பாஸ்வெல் என்பவர். ஜான்ஸனோடு நெருங்கிப் பழகி அவரது பேச்சுக்களையும் கருத்துக்களையும் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்ட பாஸ்வெல் பிற்காலத்தில் ஜான்ஸனைப் பற்றிய அற்புதமான வாழ்க்கை வரலாற்றை ஆங்கில இலக்கியத்துக்கு ஆக்கிக் கொடுத்தார். ஆக்ஸ்போர்டு, டப்ளின் சர்வகலாசாலைகள் ஸாமுவேல் ஜான்ஸனுக்கு இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தன.

ஜான்ஸனுக்கு மரணத்திடம் ஒரு பயம். எப்போதும் அதே பீதியில் இருந்தவர். 1784ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ந் தேதி நண்பர்கள் சூழ்ந்திருக்க மிகத் துணிவுடன் மரணத்தைச் சந்தித்தார். வெஸ்ட்மினிஸ்டர் கல்லறையில் இவரது புனித உடல் புதைக்கப் பட்டது. எங்கெங்கு ஆங்கிலம் பேசப் படுகிறதோ, எழுதப்படுகிறதோ அங்கெல்லாம் ஜான்ஸன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்; தமது மகத்தான படைப்பான ஆங்கில அகராதியின் மூலமாக!

— வி. கே.

கொளுத்தி விடுங்கள். கொஞ்ச நேரத்தில் கூடையைத் தூக்கிக் கொண்டு பலூன் மேலே எழும்பும் அதிசயத்தைக் காணலாம். தீ நாக்குகள் காகிதப் பலூனைத் தொடாதபடி கம்பிக்கூடை உயரமாக இருக்கட்டும். இதைத் திறந்தவெளியில் செய்து பார்ப்பதுதான் நல்லது.

பேப்பர் பலூன் ஏன் இப்படித் தானாகவே மேலே எழும்புகிறது? காற்று உஷ்ணமாகும்போது விரிவடைந்து இலேசாகிவிடுகிறது. சுற்றுப்புறத்துக் காற்றைவிடப் பலூனினுள்ளிருக்கும் காற்று இலேசாகி விடுவதால் அது தானாக மேலே எழும்புகிறது.



தெரியுமா?

133 அங்கோலாவை ஆளும் ஐரோப்பிய நாடு எது?

134 உலகின் தெற்கு முனைக்கு (சவுத் போல்) முதன் முதலில் போனது யார்?

135 கீழ்க்கண்ட குணங்களுக்கு ஏற்ற வர்ணங்களைச் சொல்ல முடியுமா உங்களால்?

(a) கோழைத்தனம் (b) ஆபத்து (c) பிற்போக்கு வாதம் (d) அனுபவமில்லாமை (e) சரணாகதி

136 ஒரு பிரபல ஆங்கிலக் கவிஞர் பல வருஷங்கள் சிறையில் வாழ்ந்தார்— தம் மதக் கொள்கை காரணமாக.. அவர் யார் தெரியுமா?

137 ஒரு பிரபல ஆங்கில இலக்கியம். அதில் ஃபாகின் (Fagin) என்ற ஒரு பாத்திரம் வருகிறது. அந்தப் பிரபல இலக்கியம் எது?

138 உலக மகா நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் ஒன்றில் ஸ்காட்லாந்து மன்னர் கொலை செய்யப் படுவதாக வருகிறது. அந்த நாடகத்தின் பெயர்?

139 'ஷெர்லக் ஹோம்ஸ்' என்ற பெயரைக் கேள்விப்பட்டதுண்டா? ஆங்கில இலக்கியத்தில் பிரபல துப்பறியும் புலி. இவர் லண்டனில் எந்தத் தெருவில் வசித்ததாக வருகிறது தெரியுமா?

140 'சார்ஜ் ஆஃப் தி லைட் பிரிகேட்' என்றொரு பிரபல ஆங்கிலக் கவிதை. உங்களில் சிலர் படித்திருக்கலாம். இல்லாவிட்டால் மேல் வகுப்புக்களில் படிக்க வேண்டியிருக்கும். இதை எழுதியவர் யார்?

141 'வாக்ஸால்' என்றொரு கார். ரொம்பப் பிரபலமானது. இது முதன் முதலில் எங்கு தயாரிக்கப்பட்டது?

142 இரும்பினலான வெட்டுக் கருவிகள் செய்வதற்குப் பெயர் பெற்ற ஒரு நகரம் இங்கிலாந்தில் உள்ளது. அது எது?

143 கடவுளே இல்லை என்று கூறுபவர்களின் இயக்கத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

144 பகவான் புத்தர் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

145 நீல நைல் வெள்ளை நைலுடன் எங்கு ஒன்று சேருகிறது?

146 அஸ்வான் அணை எந்த நாட்டில் உள்ளது?

147 எஸ்கிமோக்கள் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தும் படகின் பெயர் என்ன?

148 ஒளியின் வேகம் எவ்வளவு?

149 டாங்கோ என்றால் என்ன என்று தெரியுமா?

150 கானடாவின் தலைநகர் எது?

151 'வாட்டர் போலோ' விளையாட்டில் ஒரு கோஷ்டியில் எத்தனை பேர் இருப்பார்கள்?

152 பசுவுக்கு எத்தனை இரைப்பை?

153 பிளாசிச் சண்டையின் வெற்றி வீரன் யார்?

154 சயாம் நாட்டின் இன்றையப் பெயர் என்ன?

155 'டாரி ஸெல்லி' என்ற பெயரைக் கேட்டதும் உங்களுக்கு நினைவு வருவது எது?

156 இத்தாலியின் சர்வாதிகாரியாக 1936ல் விளங்கியது யார்?

157 நன்னம்பிக்கை முனையை முதன் முதலில் கண்ட ஐரோப்பியர் யார்?

158 சைப்ரஸின் தலைநகர் எது?

விடைகள்: 133. போர்ச்சுகல். 134. அமுட்ஸன். 135. ஏ. மஞ்சள், பி. சிவப்பு, சி. நீலம், டி. பச்சை, ஈ. வெள்ளை. 136. புன்யான். 137. ஆலிவர் ட்விஸ்ட். 138. மாக்பெத். 139. பேக்கர் தெருவில். 140. லார்டு டென்னிசன். 141. லூடன் நகரில். 142. ஷெஃபீல்டு. 143. நாத்திகவாதம். 144. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் 145. கார்ட்டோம் என்ற இடத்தில். 146. எகிப்தில். 147. கயாக். 148. வினாடிக்கு 1,86,000 மைல்கள். 149. தென் அமெரிக்கர்களின் நடனம். 150. ஒட்டாவா. 151. ஏழு பேர். 152. நான்கு. 153. ராபர்ட் க்ளைவ். 154. தாய்லாந்து. 155. பாரோமீட்டர் கண்டு பிடித்தவர் என்பது. 156. முஸோலினி. 157. பார்த்தலோமியோ டயஸ். 158. நிக்கோஸியா.




மூளைக்கு வேலை


கோகுலம் சர்க்கஸின் ரிங் மாஸ்டர் சொல்கிறார், அவருடைய சர்க்கஸில் உள்ள மிருகங்களில் மூன்று இந்தப் பக்கத்தில் ஒளிந்து கொண்டிருக்கின்றனவாம். அவைகளில் இரண்டை; எண்களை வரிசையாகக் கோடுகளால் சேர்ப்பதன் மூலமும், மற்றதை அந்தக் கட்டங்களின் கோலத்தில் புள்ளியோடு இருக்கும் பகுதிகளை மட்டும் வண்ணப் பென்சிலால் மூடுவதன் மூலமும் கண்டுபிடித்து விடலாமாம். அதோ இடையில் இருக்கிறதே எண்களாலே உருவான சீல் மிருகம், அதற்கு மீன் என்றால் ரொம்பப் பிடிக்கும். அதன் உடலில் உள்ள எண்களையெல்லாம் கூட்டினால் வரும் எண்ணிக்கைதான் அது ஒரு நாளைக்குச் சாப்பிடும் மீனின் தொகை. எண்ணிப் பார்த்து ஒரு நாளைக்கு அது எத்தனை மீன்களை விழுங்குகிறது என்று சொல்லுங்கள், பார்க்கலாம்.

— டிக்கு









கிழவியை மணந்த அரசகுமாரன்



ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மகன். இளவரசனும், சேனாதிபதியின் மகனும் ஒரு நாள் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார்கள். இருவருக்கும் சம வயது. சேனாதிபதியினுடைய சொந்தப் பிள்ளை இல்லை அவன். அவருக்குக் குழந்தைகள் இல்லாததால் யாருடைய குழந்தையையோ தன்னுடைய குழந்தையாகப் பாவித்து வளர்த்து வந்தார் சேனாதிபதி. அது போகட்டும். சொக்கட்டான் ஆட்டத்துக்கு வருவோம்.

இளவரசன் இந்திரபாலும் சேனாதிபதியின் மகன் ஜெயசிம்மனும் விளையாடிக் கொண்டிருக்கும் போது இளவரசன் தோற்றுப் போனான். இதனால் ஆத்திரமடைந்த இளவரசன் ஜெயசிம்மனை இழிவாகப் பேசி ஏசினான். தோல்வியினால் ஏற்பட்ட தாபம் அது. ஜெயசிம்மனும் இளைஞன்தானே? தணிந்து போக வேண்டியவனும்கூட. தன்மானம் அவனை அப்படிச் செய்ய விடவில்லை. இளவரசனைவிடப் பலசாலியாதலால் தன்னை இகழ்ந்தவனை அடித்துவிட்டான். இளவரசனின் சில்லி மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. சாதாரணக் குடிமகனின் ரத்தமா? அரச குமாரனின் உதிரமல்லவா?

நடந்த விஷயம் அரசரின் கவனத்துக்கு வந்த போது அவர்கள் எப்படிக் குதித்திருப்பார் என்று கற்பனை செய்து பாருங்கள். ''இவ்வளவு கோழையாக ஊர் பேர் தெரியாத ஒருவனிடம் மூக்கு உடைபட்டு நிற்பதைவிட என் மகன் இறந்து விட்டான் என்ற செய்தியை என்னிடம் சொல்லி இருக்கலாமே!'' என்று வேதனைப் பட்டார். பிறகு அந்த வேதனை ஜெயசிம்மன் மீது கோபமாக மாறியது. அரசகுமாரனை அடித்த அநீதிக்கு விசாரணை நடத்தித் தண்டனை வழங்கப்படும் என்று அறிவித்தார் அரசர். அவர் எதையுமே விசாரணை நடத்தாமல் தாமாக எந்த முடிவும் எடுக்கமாட்டார். விசாரணையின் முடிவு என்னவாக இருக்கும் என்று ஜெயசிம்மனுக்குத் தெரியும். இந்த விஷயத்தில் அரசர் யாருடைய பேச்சுக்கும் செவிசாய்க்கவும் மாட்டார் என்பதையும் அவன் அறிவான்.

ஜெயசிம்மன்மீது விசாரணை நடத்தப் பதினைந்து தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டது. இந்தப் பதினைந்து தினங்களில் அவன் கைதியானாலும் தன் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம். ஆனால் அவனைக் கண்காணித்தபடி காவல் இருந்து வரும். விசாரணைத் தினத்துக்கு முதல் நாள் கவலையோடு ஊருக்கு வெளியே உலாவியபடி நடந்து கொண்டிருந்தான் ஜெயசிம்மன். அப்போது ஒரு கிழவி எதிர்ப்பட்டாள். இவனுடைய கவலை படிந்த முகத்தைக் கண்ட கிழவி, ''வாலிபனே, உன் கவலையைப் போக்கி உன்னைக் காப்பாற்ற என்னால் முடியும். ஆனால் அதற்குப் பிரதியாக நீ எனக்கு ஒரு வாக்களிக்க வேண்டும்'' என்றாள்.

''நிபந்தனை என்ன சொல்'' என்றான் ஜெயசிம்மன்.

''அரசரின் கோபத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் நான் உன்னை விடுவித்து விடுகிறேன். நீ என்னை மணந்து கொள்ள வேண்டும்'' என்றாளே பார்க்கலாம்! இதைக் கேட்ட ஜெயசிம்மன் முதலில் திகைத்தே போனான். ஆனால் யோசித்தபின், இறப்பதைவிட இது எவ்வளவோ மேல் என்று தோன்றவே, கிழவியின் நிபந்தனைக்கு இணங்கினான். கிழவி அவன் காதோடு ஏதோ சொல்லி அவன் கையில் ஒரு சிறு பேழையையும் கொடுத்தாள். அவன் தன் நிபந்

தனையை மறக்காமல் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டுத். தன் வழியே போனாள் கிழவி.

விசாரணை நாள். அவையில் அறிஞர்கள் கூடி இருந்தனர். அரசரும் தம் அரியணையில் அமர்ந்திருந்தார். ஜெய சிம்மன் தனக்காக வாதாடத் தன்னையே அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அரசரும் அனுமதி அளித் தார். குற்றவாளிக் கூண்டிலிருந்த ஜெயசிம்மன் மன்னரைப் பார்த்துக் கூறலானான்.

''அரசே! இப்போது நான் ஒரு ரகசியத்தைச் சொல்லப் போகிறேன். அது உங்கள் வாழ்க்கையோடு தொடர்புடையது. உங்களுக்குத் திருமணமாகி நாலைந்து ஆண்டுகளாகியும் பட்டத்து ராணி தங்களுக்கு ஒரு குழந்தையைத் தரவில்லை. இதனால் நீங்கள் மிகவும் ஏங்கிப் போனீர்கள். அதன் பிறகு நீங்கள் அந்நியர்களின் படையெடுப்பைச் சமாளிக்கப் படைகளுடன் நாட்டைவிட்டுப் போனீர்கள். நீங்கள் திரும்பி வரச் சில வருஷங்களாயின. அந்தச் சமயத்தில் உங்கள் மனைவி — ராணியார் — யாருக்கோ பிறந்த ஒரு குழந்தையைத் தம்முடையதாக்கிக் கொண்டு அது உங்கள் குழந்தை என்று ஊரார் நம்பும்படி நடித்தார். நீங்கள் போர் மீது செல்வதற்கு முன்பே தாம் கருவுற்றிருந்ததாகவும், பிறகு குழந்தை பிறந்ததாகவும் கூறினார். அரசியின் வார்த்தையை யாரும் சந்தேகிக்கவில்லை. நீங்களும்கூடத்தான் இதன் பிறகு ஓராண்டு காலத்தில் அரசியார் திடீரென்று இறந்தார்கள்.

''இந்த நிலையில் நீங்கள் ஒரு தடவை வேட்டையாடக் கானகத்துக்குப் போனீர்கள். அங்கே ஓர் அழகிய மங்கையைக் கண்டு அவளிடம் மையல் கொண்டீர்கள். அவளைக் காந்தர்வ





''கொஞ்சம் சீக்கிரம் அந்தண்டை போயிடுங்க, என் குழந்தை உங்களை எல்லாம் பார்த்து பயப்படுறான்!''

மணம் புரிந்து கொண்ட நீங்கள் அடிக்கடி இரகசியமாகக் காட்டிலுள்ள அவளது குடிசைக்குப் போய் அவளுடன் சில நாட்கள் தங்கிவிட்டு வந்தீர்கள். உங்கள் உள்ளங் கவர்ந்த அந்த அழகி உண்மையில் கானகத்துப் பெண்ணல்ல. அவள் ஒரு சிறிய நாட்டின் இளவரசி. ஒரு தடவை அரசாங்க அலுவல் காரணமாக அவளைச் சந்திப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. உங்களை எதிர்பார்த்து நீங்கள் வழக்கப்படி வராததினால் மனம் உடைந்து போன அப்பெண் நீங்கள் அவளைக் கைவிட்டதாகக் கருதித் தன் தகப்பனாரிடம் போய்விட்டாள். இதன் பிறகு நீங்கள் ஒரு நாள் அவளைக் காணச் சென்ற போது குடிசை காலியாக இருப்பதைக் கண்டு திகைத்தீர்கள். எங்கு தேடியும் அவளைப் பற்றிய செய்தி உங்களுக்குக் கிடைக்கவில்லை.

''தன் தகப்பனாரிடம் கோபித்துக் கொண்டு கானகத்தில் வாழ்ந்து வந்த அந்தப் பெண் மறுபடியும் தன் தகப்பனாரிடமே திரும்பிச் சென்ற பிறகு அங்கு நான், அவளது மகனாக — ஏன், உங்களுடைய பிள்ளையாகப் பிறந்தேன். இந்த உண்மையை நிரூபிக்க அந்தக் கானகத்துப் பெண்ணுக்கு நீங்கள் காந்தர்வ மணத்தின்போது அணிவித்த மோதிரம் இதோ'' என்று கூறியபடியே ஜெயசிம்மன் ஒரு சிறு பேழையை மன்னரின் முன்னே நீட்டினான்.

ஜெயசிம்மன் கூறியவற்றைக் கேட்ட மன்னரின் வாயடைத்துப் போய்விட்டது. அவன் கூறியதெல்லாம் உண்மைதான். அவன்தான் அவருடைய உண்மையான மகன் என்பதும் தெரிந்து விட்டது. அதை ஊர்ஜிதப்படுத்துவது போலச் சேனாதிபதி — ஜெயசிம்மனின் தந்தை — தனக்கு அவன் எப்படிக் கிடைத்தான் என்பதை விளக்கினார். சேனாதிபதிக்குப் புத்திர பாக்கியம் இல்லை. ஒரு நாள் அதிகாலையில் பச்சிளங் குழந்தையொன்று தம் வீட்டு வாசலில் சந்தனப் பேழையில் பட்டுத் துணிகளிடையே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதை ஆண்டவனே தமக்கு அளித்ததாகக் கருதி எடுத்து வளர்த்ததாகக் கூறினார்.


ஜெயசிம்மனுக்கு மன்னர் உடனே விடுதலை வழங்கினார். தன் பிறப்பைப் பற்றிய உண்மை அவனுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்ட போது ஜெயசிம்மன் கிழவியைப் பற்றிக் கூற வேண்டியதாயிற்று.


கிழவிக்கும் அழகன் ஜெயசிம்மனுக்கும் விவாகம் நடந்தது. அந்தக் கல்யாணத்தில் யார் முகத்திலும் மகிழ்ச்சியில்லை. கிழவியின் கழுத்தில் தாலி கட்டிய அடுத்த நிமிஷம் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. மணப் பெண்ணான கிழவியின் உருவத்தில் மெள்ள மெள்ள மாற்றங்கள் ஏற்பட்டன. முகத்தின் சுருக்கங்கள் மறைந்தன. உடலில் பளபளப்பும் இளமையும் கூடின. எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கிழவி அற்புதமான அழகு வாய்ந்த குமரியாக நின்றாள். அவள் கூறிய கதையோ இன்னும் அதிசயமாக இருந்தது.

''உங்கள் இளவரசரின் மாமன் மகள் தான் நான். ஒரு சந்நியாசியின் சாபத்தினால்தான் எனக்கு இந்த முதுமைத் தோற்றம் ஏற்பட்டது. அழகற்ற கிழவியான என்னை யாராவது ஒரு வாலிபன் மனமுவந்து மணந்து கொள்ள முன் வந்தால் எனது சாபம் நீங்கி நான் பழைய உருவை அடைவேன் என்றும் கூறியிருந்தார் அவர். ஜெயசிம்மனின் தாயார் இறக்கும்போது தன் மகனின் இருப்பிடத்தையும் அவனுடைய பிறப்பின் இரகசியத்தையும் என்னிடம் கூறி எப்படியாவது அவனை நான் மணாளனாக அடைந்துவிட வேண்டுமென்று சொல்லிச் சென்றாள். அதன்படியே நான் இவரை மணந்து கொண்டுவிட்டேன்'' என்றாள் கிழவியாக இருந்து குமரியாக மாறின இளவரசி.

அப்புறம் என்ன என்கிறீர்களா? என்னவாக இருக்கும்? எல்லாருடைய உள்ளங்களும் உவகையால் நிரம்பி வழிந்தது. இந்திரபால் என்ன ஆனான் என்று ஒரு சந்தேகம் உங்களுக்கு. அப்படித்தானே? சேனாதிபதி இந்திரபாலைத் தம் மகனாக ஏற்றுக் கொண்டார்!

வீராதி வீரன் - கதை: கௌசிகன் சித்திரம்: ரமணி.. 8




அதே சமயம் ஜிம்மி அந்த மற்றொரு நாய் மீது பாய்ந்தது. காரணம்? பொறாமை தான்.
தம்பி, நாங்கள் இந்தியர்கள். எங்கள் விசைப் படகைப் பாகிஸ்தானியர் 'டார்பிடோ' செய்து மூழ்கடித்து விட்டார்கள். தப்பியவர்கள் நாங்கள் இருவர் தான்.
கவலைப் படாதீர்கள். உங்களை என்னால் காப்பாற்ற முடியும். இந்த மிதவையை மணலிலே மறைத்து வைத்து விட்டு, என் மறைவிடத்துக்கு உங்களை அழைத்துப் போகிறேன்.
அந்த இரு நாய்களையும் விலக்குவது ரஹீமுக்குச் சிரமமாக இருந்தது. இரண்டும் உறுமிக் கொண்டே இருந்தன. இந்திய மாலுமிகளுக்கு ரஹீம் உணவளித்தான்.
மாலுமிகள் ரஹீமின் மறைவிடத்தில் தின்று உறங்கி ஓய்வு பெற்றார்கள். ஒரு வாரம் ஓடியது. ரஹீம் மட்டும் ரோந்து சுற்றி — வருவான். ஒரு நாள்...
அதோ அந்தப் படகு தான் 'டார்பிடோ' போட் இல்லையா? இரண்டு நாளாகப் பார்க்கிறேன். அதில் ஆட்கள் அதிகமில்லை.
மறுநாள் திட்டமிட்டுச் செயல் படலானார்கள். காவல்காரர்களைக் கட்டிப் போட்டு விட்டு அந்தப் பாக் 'டார்பிடோ' படகில் தப்பி விடுவதென்றும் தங்கள் படகை மூழ்கடித்ததற்கு இது ஈடாகி விடும். ஆனால் ஜிம்மியும் புது நாயும்...?


ஐயையோ! இந்த நாய்கள் இரண்டும் நம் திட்டத்தைப் பாழாக்கிவிடும் போலிருக்கின்றன. இவைகளிடையே ஏன் இப்படியொரு விரோதம்?
அச்சா! அச்சா! நல்லாச் சண்டை போடுது. சடையன்தான் நம்பர் குத்தா. அச்சா, பஹாதூர்!
அப்படின்று மற்றது கிழக்கு வருகாளாமா! ஹஹ... ஹா!
இவர்களின் மகிழ்ச்சி இந்திய மாலுமிகளின் ரத்தத்தைச் சூடாக்கியது.
வெறியர்களா! நாய்ச் சண்டையை ரசிக்கும் நாய்களா! இது எப்படி இருக்கிறது?
காவல்காரர் இருவரும் நிலை விழுந்து விழ மாலுமிகள் பாகிஸ்தான் 'டார்பிடோ' படகில் தங்கள் நாயுடன் தாவி ஏறி அதைக் கிளப்பினர்.
தம்பி ரஹீம்! நாங்கள் வருகிறோம். உன் உதவிக்கு மிக்க நன்றி.
குட் பை, டியர் இந்தியன்ஸ்! பை.. பை..!
மாலுமிகளுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு ரஹீம் தன் தோழர்களுடன் திரும்பிக் கொண்டிருந்தான்...
'டார்பிடோப்' படகு ஓசையின்றிக் கடலில் முன்னேறியதும் அதில் கட்டப்பட்டிருந்த அவர்களுடைய நாய் தன் சங்கிலியை அறுத்துக் கொண்டு கடலில் குதித்துக் கரையை நோக்கி நீந்தி வரலாயிற்று...
தொடரும்..







ஆறு அழகான பூனைகள்

● சென்ற இதழ் கோகுலத்தில் பூனையைப்பற்றிச் சில சுவாரசியமான தகவல்களை அறிந்து கொண்டீர்கள். பூனைகளில் எவ்வளவோ வகைகள் உண்டு. அத்தனையையும் பற்றி எழுதுவதானால் இடம் போதாது. இதோ இந்தப் பக்கத்தில் சில அழகான பூனைகள் இருக்கின்றன. இவையெல்லாம் வீடுகளில் வளர்க்கப்படும் பூனை இனங்கள்.

☐ பிரிட்டனுக்கு அருகில் உள்ள ஒரு தீவின் பெயரையே தன் பெயராகக் கொண்டது இந்தப் பூனை. மாங்க்ஸ் (Manx) என்பது இதன் பெயர். இந்தப் பூனைக்கு வால் கிடையாது. உடல் அமைப்பும் கூட மற்றப் பூனைகளிலிருந்து மாறுபட்டிருக்கிறது. இதன் முதுகெலும்பு குட்டையானது. ஆனால் இதன் உடலின் பின் பக்கம் நல்ல வளர்ச்சி பெற்றதாக இருக்கிறது, முயலினுடையதைப்போல. இது நடப்பது, தப்படி வைப்பது ஆகியவை கூட முயலை நினைவுபடுத்துவதாக இருக்கும். உடலின் நிறம் நல்ல வெளுப்பு. இந்தத் தீவில் உள்ள பூனைகளுக்கு மட்டுமில்லாமல் நாய்களுக்கும் கூட வால் கிடையாது. இந்தத் தீவுவாசிகளான இந்த ஜீவன்களுக்கு மட்டும் வாலில்லாதது ஏன் என்பது புரியாத விந்தையாக உள்ளது. மாங்க்ஸ் பூனைகள் நல்ல எலி வேட்டையாளி, புத்திசாலி, நம்பிக்கையான தோழனும் கூட.

☐ ஆமை ஓட்டை நினைவுபடுத்தும் நிறம், வெள்ளையும் கறுப்புமாக. ஆமையோட்டுப் பூனை என்றே இதற்குப் பெயர். அழகுப் போட்டிகளில் பரிசு பெறும் தகுதியுடையது இந்தப் பூனை. இவ்வினங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. நல்ல ஜாதிப் பூனையான இதன் உடலில் வெளுப்பு அதிகமிருக்காது. முகம், கால்கள், பாதம் இவைகளில் கொஞ்சமாகவும், மார்புப் பக்கம் அதிகமாகவும் வெளுப்புக் காணப்படும். கறுப்பும், க்ரீம் கலரும் உடலின் பகுதிகளில் வெளுப்போடு கலந்து காணப்படும். வரிவரியாகப் புலிப் பட்டையை இதன் உடலில் காண முடியாது. கறுப்பு வண்ணங்களில் வெள்ளை ரோமம் தனித்துத் தெரிவதில்லை. இப்பூனையின் கண்கள் பெரியவை. கண்கள் ஆழ்ந்த ஆரஞ்சு வண்ணமாகவோ, தாமிரக் கலரிலோ இருக்கும். வெள்ளை நிறம் முகத்தில் கம்பீரமாக அமைந்திருக்கும்.

☐ பூனைகளிலேயே அழகானது சயாம் பூனைதான். மிக்க புத்திசாலியும் கூட. குட்டையான பட்டுப் போன்ற ரோமம். நீல நிறக் கண்கள். கம்பீரமான தோற்றம் கொண்டவை சயாமீஸ் பூனைகள். முகம், காதுகள், பாதங்கள், வால் ஆகியவை மட்டும் ஆழ்ந்த கருஞ்சிவப்பு வண்ணமாகவும் உடலின் மேல் பாகம் மிக மிக இளஞ் செம்பட்டையாகவும் அடிப் பாகம் ஆழ்ந்த க்ரீம் கலரிலும் இருக்கும். சாதாரணப் பூனைகளிலிருந்து சயாமீஸ் பூனைகள் மாறுபட்ட தோற்றம் கொண்டவை. தோற்றம் மட்டுமல்ல. குரலும்கூட மாறுபட்டிருக்கும். மனிதனின் தோழமையை மிகவும் விரும்பும் குணமுடையவை இப் பூனைகள். வளர்ப்பவர்களிடம் மிகுந்த பாசமும் பரிவும் காட்டும். சயாம் பூனைகள் விளையாட்டுக் குணம் மிக்கவை. இவை விளையாடுவதைக் காண மகிழ்ச்சியாக இருக்கும். பூனை வளர்ப்பவர்கள் இப்பூனைகளையே விரும்புவார்கள்.


□ சடை நாயைப் போலவே சடைப் பூனைகளும் உண்டு. நீண்ட ரோமம் இவைகளின் தனித் தன்மை. பாரசீகப் பூனை என்று பெயர் இவைகளுக்கு. அங்கோரா என்றும் அழைப்பார்கள். ரொம்ப அருமையான இனம். வீட்டில் இருக்கும்போதும் சரி, வெளியே எலி தேடி அலையும்போதும் சரி, ரொம்ப அமைதியாகவே இருக்கும். பாரசீகப் பூனைகள் தனித் தன்மை வாய்ந்தவை. நல்ல ஜாதிப் பூனைகள். நல்ல கறுப்பு நிறமுடையனவாகவும் இருக்கும். கண்கள் தாமிர வண்ணத்தில் இருக்கும். குட்டையான ஆனால் உறுதியான கால்களை உடையது. இந்த இனத்துக் கறுப்புப் பூனைகளோடு இதே இனத்து வேறு நிறப் பூனைகளைச் சேர விட்டுப் புதிய கலப்பு இனத்தை உருவாக்கி யிருக்கிறார்கள். இம்முறையில் தயாரான பூனைகள் சாம்பியன்களாக விளங்குகின்றன. பின்னங் கால்களை மடக்கி அதன் மீது உட்கார்ந்து நிமிர்ந்து பார்க்கும்போது இந்தப் பாரசீகப் பூனைகள் பார்க்க அழகாக இருக்கும். இவைகளின் வாலும் குட்டையானது.

□ நீல நிறமுடையவை இந்தப் பிரிட்டிஷ் பூனைகள். குட்டையான ரோமம் உறுதியான உடல், வட்டமான அழகான பாதங்கள், அளவான அங்க அமைப்புக்கள் கொண்டவை இப்பூனைகள். கலப்பில்லாத ஒரே சீரான நீல நிறம் இப்பூனைகளின் தனித் தன்மை. இந்த நிறத்தோடு சிவப்பு அல்லது மஞ்சள் நிறக் கண்களும் இருக்குமானால் அதற்கு மதிப்பு அதிகம். சில பூனைகளைப் போல் இதன் தோல் போர்வை தொளதொளப்பாக இருக்காது. உடலோடு ஒட்டிய மாதிரி உறுதியாக இருக்கும். பிரிட்டனைச் சேர்ந்த இவ்வகைப் பூனைகள் அறிவுள்ளவை. நட்புக்கு ஏற்றவை. வீட்டிலுள்ள மற்றப் பிராணிகளோடு தோழமையோடு பழகக் கூடியவை. இவை தங்கள் நகங்களைக் கூராக்கிக்கொள்ள வீட்டு மரச் சாமான்களைப் பயன்படுத்துவதில்லை. வீட்டுக்கு வெளியேயுள்ள மரங்கள்தான் இவைகளின் தீட்டுக்கல். மரத்தின் பட்டைகளில் தங்கள் நகங்களைத் தேய்த்துக் கூருக்கிக் கொள்ளும். ஆங்கில இலக்கியங்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ள பூனை இது.

□ துருக்கியிலிருந்து நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள கிழக்கு எல்லையில் ரஷ்ய நாட்டை ஒட்டினாற் போலுள்ளது 'வான்' என்ற ஏரி. இப்பகுதியிலிருந்து வந்துள்ளது இந்த வான் பூனை. துருக்கியில், நிறத்திலும், ரோமத்தின் நீளத்திலும் மாறுபட்ட பல்வேறு இனத்துப் பூனைகள் உள்ளன. வெள்ளை உடலும் ஒரு கண் பச்சையாகவும் மற்றொரு கண் நீலமாகவும் உடைய ஒரு பூனை அங்கு உண்டு. இதற்கு அங்காரா பூனை என்று பெயர். இந்த வான் பூனைக்கும் நீளமான வெள்ளை ரோமம்தான். ஆனால் வால் மட்டும் 'ஆபர்ன்' வண்ணத்தில் பளிச்சென்றும், பழுப்பு நிறமாகவும் மாறி மாறி வளையங்களாக இருக்கும். தலையிலும் இந்த 'ஆபர்ன்' வண்ணம் கலவைவிட்டிருக்கும். பெரிய பிரகாசமான மஞ்சள் நிறக் கண்களை உடையது. மூக்கு, காதுகள், பாதங்கள் கருமை கலந்த இளஞ்சிவப்பாக இருக்கும். பொதுவாகப் பூனைகளுக்குத் தண்ணீரைக் கண்டால் பிடிக்காது. ஆனால் இந்த வான் இனப் பூனைகள் குட்டியிலேயே ஓட்டம்மிக்க ஆற்றில் எதிர்த்து நீந்தும். — வெண்மணி







பொன் பறவை

திருவிபாளையம் ஓர் அழகிய நகரம். அதன் தலைவர் ஒரு ஜமீன்தார். அவர் நல்லவர். நாட்டு மக்களுக்கு நன்மைகள் பல செய்தார். என்றாலும் நாட்டைக் கவனிக்காததால் நாளுக்கு நாள் கடன் ஏறி வந்தது. பொக்கிஷம் காலியாகும் நிலை நெருங்கிக் கொண்டிருந்தது. பிறகு மந்திரியை அழைத்துத் தனிமையில் கலந்து பேசினார்.

மந்திரி மிகவும் கெட்டிக்காரர். ஜமீன்தாரிடம் உள்ள குறை நிறைகளைத் தெரிந்தவர். நெடு நேரம் சிந்தித்த பிறகு அவரிடம் மிகவும் தணிந்தகுரலில், ''இமயத்திலே மானஸரோவர் என்ற ஒரு பெரிய ஏரி. அதிலே பொன்னிறமான அன்னப் பறவைகள் உண்டு. அவைகளை இராஜ ஹம்ஸம் என்பார்கள். நம் பூஞ்சோலையில் உள்ள தாமரைக் குளத்துக்கு விடியற்காலை நாலு மணிக்கு அதில் ஒரு ஜோடி அன்னப் பறவைகள் வருகின்றன. நீங்கள் ஒரு வாரம் அதைப் பார்த்து வந்தால் நம்மைப் பிடித்த தீமைகள் எல்லாம் விலகும்; செல்வம் பொங்கும். உங்களோடு நானும் வருகிறேன். ஆனால் இது குடிமக்கள் ஒருவருக்கும் தெரியக் கூடாது'' என்றார்.

ஜமீன்தாரின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. ''நாளைக்கே போவோம்'' என்றார்.

மறு நாள் விடியற்காலை. மூன்று மணிக்கே எழுந்து ஜமீன்தாரும் மந்திரியும் மாறுவேஷம் அணிந்து அரண்மனையின் பின் வாசல் வழியே ஊருக்கு வெளியே உள்ள அந்தப் பூஞ்சோலையை நோக்கி நடந்தனர். அந்தத் தோட்டத்துக்கும் காவற்காரன் உண்டு. அவன் அங்கே இல்லை. இவர்கள் போகும் வழியில் தானியங்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியம் இருந்தது. அதன் கதவு திறந்திருந்தது. அங்கு ஒருவன் அடுத்த கிராமத்து ஆள் ஒருவனது முதுகிலே நெல் மூட்டையை ஏற்றித் திருட்டுத்தனமாய் வெளியே அனுப்பிக் கொண்டிருந்தான். வண்டி வண்டியாய் நெல் மூட்டைகள் திருடு போவது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. அதைக் கவனியாதவர்கள் போல் இருவரும் பூஞ்சோலைக்குள் புகுந்து அந்தப் பொன் மயமான ராஜ ஹம்ஸத்தைப் பார்க்க ஒரு மரத்தடியிலே உள்ள கல் பலகையின் மீது உட்கார்ந்தனர். நெடுநேரமாயிற்று. குளத்தையே பார்த்துப் பார்த்துக் காத்திருந்தனர் இருவரும். அந்த ராஜஹம்ஸம் வரவேயில்லை. பொழுதும் விடிந்தது. இருவரும் அரண்மனைக்குத் திரும்பினர்.

மறு நாளும் இதே போல் இருவரும் எழுந்து வேறொரு வழியாக அந்தச் சோலையை அடைந்தனர். அன்றும் காவற்காரனைக் காணோம். போகும் வழியில் அரண்மனையைச் சேர்ந்த மாட்டுக் கொட்டில் உண்டு. அங்கு இடையன் பால் கறந்து கறந்து இரகசியமாய்த் தன் உறவினருக்கு அளந்து கொண்டிருந்தான். பகவுக்கு உபயோகமாகும் தவிடு பிண்ணாக்கு முதலியவைகளைச் சிறு மூட்டையாக்கித் தன் மகனிடம் கொடுத்து விடியுமுன் வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருந்தான் இவர்கள் இதைக் கண்டும் காணாதது போல் செய்திகளைத் தெரிந்து கொண்டு மேலே நடந்தார்கள்.

அன்றும் நெடு நேரம் காத்திருந்தனர். அந்தப் பொன் பறவை வரும் அடையாளமே தெரியவில்லை.

ஆயிற்று. இப்படியே ஆறு நாட்கள் ஓடிவிட்டன. ஆறு பெரிய திருட்டுக்களைக் கண்டுபிடித்தார் அவர். பிறகு மந்திரியை நோக்கி, ''பொன் பறவையைப் பாராமலேயே கடன் எப்படி வந்தது என்று எனக்கு விளங்கி விட்டது. பறவை வராவிட்டாலும் அதன் அருள் கிடைத்து விட்டது'' என்றார்.

அன்று முதல் தாமே முன் வந்து ஒவ்வொரு தொழிலாளியையும் உழவுத் தொழில் செய்பவரையும் அரண்மனைச் சிப்பந்திகளையும், தோட்டம், துரவு, குளம், குட்டைகள், எல்லாவற்றையும் நேரில் சென்று பார்வையிட ஆரம்பித்தார். சோம்பேறிகளும், திருடர்களும் இனிமேல் ஜமீன்தாரை ஏமாற்ற முடியாது. ஏமாற்றினால் கடும் தண்டனை கிடைக்கும் என்று பயந்து ஒழுங்காக நடக்க ஆரம்பித்தனர்.

ஜமீன்தாரின் அரண்மனையும் நகரமும் செழிக்க ஆரம்பித்தன. கஜானாவும் நிறைந்து வழியலாயிற்று.

• குகப்ரியை •





சீனக் கிழவன்

சீன தேசத்தில் நான்-கிங் என்ற ஊர் உள்ளது. அந்த ஊரில் சுவாங் என்ற கிழவன் இருந்தான். அவனிடம் ஒரு குதிரை இருந்தது. ஒரு நாள் அது எங்கோ ஓடிவிட்டது. அவன் வீட்டு அருகில் இருந்தவர்கள் அதைப் பற்றி அனுதாபத்தோடு கேட்டார்கள். அப்போது அவன் ''எல்லாம் நன்மைக்கே'' என்றான்.

சில நாட்களுக்குப் பின் அக்குதிரை வேறு ஒரு குதிரையுடன் திரும்பி வந்தது. அதைக் கண்டு ஊரார் அவனிடம் ''உனக்கு அதிர்ஷ்டந்தான்'' என்றனர். அவனோ ''இதனால் எனக்கு நஷ்டமே'' என்றான்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள், அக்கிழவனுடைய மகன் புதிய குதிரையின்மேல் சவாரி செய்தான். அப்பொழுது குதிரையின் மேலிருந்து விழுந்தான். அதனால் அவனது இடது கை ஒடிந்தது. அதைக் கண்டு ஊரார் அவனைப் பார்த்து அனுதாபப்பட்டனர். ஆனால் அவனோ, ''இதுவும் நன்மைக்கே'' என்றான்.

அதே சமயம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் போர் மூண்டது. கைகால் சரியாக உள்ள வாலிபர்கள் போர்வீரர்களாக ராணுவத்தில் வந்து சேர்ந்து பணி புரிய வேண்டும் என்று சீன மன்னர் கட்டளை பிறப்பித்தார். கிழவனுக்கு ஒரே மகன் தான். அவனுக்கு ஒரு கை ஒடிந்திருந்ததினால் ராணுவத்தில் சேரத் தகுதியற்றவனானான். அவனுக்குக் கை சரியாக இருந்திருக்குமானால் ராணுவத்தில் சேர்ந்து போர்க்களத்துக்குப் போயிருக்க வேண்டும். அங்கிருந்து உயிரோடு திரும்புவது என்ன நிச்சயம்? கை இழந்ததினால் தந்தைக்கு உதவியாக வீட்டிலேயே இருந்தான். கை ஒடிந்ததும் ஒரு விதத்தில் நன்மைதானே?

அப்படியா ?

☐ ஒரு சாதாரண காகிதப் பென்சில் இருக்கிறதே இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? ஏழு அங்குலம்—18 செ. மீட்டர்கள். இதைக் கொண்டு 35 மைல் நீளத்துக்குக் (56 கிலோ மீட்டர்கள்) கோடு கிழிக்கலாம். இந்தக் காகிதப் பென்சிலில் 25க்கும் மேலான பொருள்கள் அடக்கம். பிரேஸில் நாட்டிலிருந்து மெழுகு, இங்கிலாந்திலிருந்து களிமண், இரான் நாட்டிலிருந்து கோந்து, நியூ ஜெர்ஸியிலிருந்து துத்தம், இலங்கை அல்லது மெக்ஸிகோவிலிருந்து கிராபைட், தென் பசிபிக்கிலிருந்து திமிங்கில எண்ணெய் இத்தனையும் தருவிக்கப்படுகின்றன காகிதப் பென்சில் தயாரிக்க. எங்கே? நம் பாரதத்திலா? அதுதான் இல்லை. அமெரிக்காவில் தயாராகும் காகிதப் பென்சிலுக்கு!






☐ எலிகளைப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. எலிகளில் எத்தனையோ வகை உண்டே? நீங்கள் அநேகமாக வீட்டு எலியைத்தான் பார்த்திருப்பீர்கள். கிராமத்தில் இருப்பவர்களுக்குப் பல எலிகளைப் பற்றித் தெரியும். மேலே படத்தில் இருப்பது வயல் எலி. வயல் எலிகளின் ஆயுட்காலம் ஒரு வருஷத்துக்கும் மேலே. இது தன் வாழ்நாள் முழுதும் ஓய்வே இல்லாமல் உணவு தேடித் தின்று தீர்க்கும். கொறித்துத் தின்னும் வகையைச் சேர்ந்த இந்தச் சின்னஞ் சிறு பிராணி ஒவ்வொரு நாளும் தன் எடைக்குச் சமமான உணவை விழுங்கும் ஆற்றல் பெற்றது. பல பெரிய பிராணிகள், பறவைகளுக்கு இது ஆகாரமாகப் போவதும் உண்டு.

☐ ஆங்கில மொழியில் முதல் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டவர் யார் தெரியுமா? வில்லியம் காக்ஸ்டன். காக்ஸ்டனின் பிறந்த வருஷம் தெரியவில்லை. 1438ல் ராபர்ட் லார்ஜ் என்ற பிரபல துணி வியாபாரியிடம் லண்டனில் தொழில் கற்பவராக அமர்ந்தார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு புருக்ஸ் நகருக்கு அனுப்பப்பட்டார். 1471ல் கலோன் நகரில் அச்சு பற்றி அறிந்திருக்கிறார். புருக்ஸில் 1474ல் ஓர் அச்சகத்தை நிறுவி முதல் ஆங்கிலப் புத்தகத்தைத் தயாரித்து வெளியிட்டார். 1476 வாக்கில் இங்கிலாந்துக்குத் திரும்பிய காக்ஸ்டன் தம்மைப் புத்தகம் அச்சிடுபவராகப் பிரகடனப்படுத்திக் கொண்டு ஓர் அச்சகத்தை வெஸ்ட்மினிஸ்டர் சதுக்கத்தில் நிர்மாணித்தார். இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட முதல் ஆங்கிலப் புத்தகம் 'தத்துவப் பெரியார்களின் போதனைகள்' என்பது 1477ல் வெளிவந்தது.





☐ 'கடல் பசு'வைப் பார்த்திருக்கிறீர்களா? இதோ படத்தில் இருப்பதுதான் அது. மானட்டீ என்று இதற்குப் பெயர். குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்தது இந்த 'மானட்டீ'கள். ஃப்ளோரிடா மாகாணத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள கழிநீர்க் கால்வாயின் ஓட்டத்தைத் தடை செய்யுமளவுக்கு இதில் ஒருவகைப் பூண்டுகள் ஏராளமாய் வளர்ந்தன. இவைகளை வெட்டி அப்புறப்படுத்த மாளவில்லை. இந்தக் கால்வாயில் ஐந்து கடல் பசுக்களைக் கொண்டு வந்து விட்டார்கள், அவ்வளவுதான். இந்தப் பசுக்கள் அந்த ராட்சதப் பூண்டுகளை ஒரே வருஷத்தில் அழித்துக் கால்வாயின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தி விட்டனவாம்!




ஏண்டா, எதைக் கேட்டாலும் தெரியாது...! என்கிறுயே. 'தெரியும்' என்பதற்கு எதிர்ப் பதமாவது தெரியுமா?

'தெரியாது' சார்!''

சபாஷ்! கரெக்ட்!''

சிரிக்கச்




மாஜிக் செய்பவர்:—இதோ பாருங்கள்! யாரேனும் ஒருவர் மேலே ஏறி வாருங்கள். டேய் பையா! என்னை உனக்கு முன்பே தெரியுமா?

பையன்:—தெரியாது, சித்தப்பா!

சிரிக்க...

கோழிக் குஞ்சு:—பார்த்தாயோ இந்தக் காலத்து அம்மாக்களை? பூராவும் அடை காக்க நேரமில்லையாம், வெளியே கிளம்பிடுறாங்க!




சாமா—




ஆமை டாக்டர்:—இரண்டு வருஷங்களுக்கு முன்னுலே தாத்தாவுக்கு சீரியஸா இருக்கு, அர்ஜெண்டா வாங்கோன்னு கூப்பிட்டது நீதானே. அவர் இப்ப எங்கே இருக்கார்?

''மேலே இருக்கார்!''

''எங்கே மரத்துமேலேயா?''



மாலாவுக்கு நடக்கப் பொறுமை இல்லை. பள்ளிக்கூடத்தி லிருந்து ஒரே மூச்சில் வீட்டுக்கு ஓடி வந்தாள். கதவைத் தட்டிக் கொண்டே, 'அம்மா,



அம்மா' என்று கத்தினாள். அன்னை சாரதா கதவைத் திறந்ததும் மாலா அவளைக் கட்டிக் கொண்டாள். பேச முடியவில்லை. கண்களிலிருந்து நீர் பெருகியது. சாரதாவுக்குக் கவலையாகி விட்டது.

சிறிது நேரம் களைப்பாறியதும், ''அம்மா! சமாசாரத்தை உடனே சொல்ல வேண்டும் என்று ஓடிவந்தேன். எனக்கு மானியம் கிடைத்திருக்கிறது. என் வகுப்பில் நான் முதலாவதாக இருப்பதால், ஏழைப் பெண்களுக்குள்ள புலமைப் பரிசில் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள்!'' என்றாள்.

சாரதாவுக்குப் பெரும் மகிழ்ச்சி. அவள் புருஷன் சங்கரன் ஒரு மின்சாரத் தொழிலாளி. நிச்சயமான சம்பளம் இல்லை. தேவையுள்ள வீடுகளில் வேலை செய்து தினசரி ஐந்து ரூபாய் கூலி பெறுவான். சில நாட்களில் அந்த வேலையும் கிடைக்காது.

மாலாவைத் தழுவி முத்தமிட்டுக் கொண்டே, ''உன்னைப் போல் பெண் இருக்கும்வரையில் எங்களுக்கு என்ன குறை? பிள்ளை இல்லை என்றுகூட நான் வருந்தவில்லை'' என்று சாரதா சொன்னாள்.

[illegible]

விதியும் மதியும்

க. சந்தானம்



தடவிக் கொடுத்தான். "உன் புத்தி சாலித்தனத்தில் எனக்கு எப்போதும் சந்தேகமில்லை. நமக்கு இந்த மானியம் பெரிய உதவிதான். ஆனால் உன் அழகும், படிப்பும் ஆரோக்கியமும் குன்றாமலிருந்தால் அதுவே போதும், என் கண்மணி!" என்றான்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, "மாலாவுக்கு நல்லதாக இரண்டு பாவாடை தைக்க வேண்டும். மானியம் கிடைத்தபிறகு கிழிந்த பாவாடையைக் கட்டிக் கொண்டு போகக் கூடாது" என்றாள் சாரதா.

மாலா அவளை மறித்து, "எனக்கு அவசரம் இல்லை அப்பா. அம்மாவுக்குத் தான் ஒரு புடவை வேண்டும். நீயும் ஒரு நல்ல சட்டை வாங்கிக் கொண்டால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்" என்று கூறினாள்.

எல்லாரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, கூடத்தில் வந்து உட்கார்ந்தனர். மாலாவின் வருங்காலத்தைப் பற்றிச் சங்கரனும் சாரதாவும் கற்பனை செய்து கொண்டிருந்தனர்.

"அப்பா! எனக்குத் தினமும் பள்ளிக் கூடத்துக்கு நடந்து போவது கஷ்டமாக இருக்கிறது. அடுத்த வீட்டு மீனு சைக்கிளில் வருகிறாள். எனக்கும் ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் நேரமும் மிச்சமாகும். சிரமமும் இருக்காது" என்றாள் மாலா.

"அதற்கென்ன மாலா, நாளைக்கே ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படாதே" என்றான் சங்கரன்.

சாரதா அவனைத் தடுத்து, "நீங்கள் அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடாதீர்கள். நாம் அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது? குழந்தை எங்கேயாவது கீழே விழுந்து, காலைக் கையை முறித்துக் கொண்டு வந்தால் நமது கதி என்ன?" என்று கண்ணீர் விட ஆரம்பித்தாள் சாரதா.

ஆனால் அவள் சொல்லைப் பொருட்படுத்தவில்லை சங்கரன். மறுதினமே ஒரு சைக்கிள் வியாபாரியிடம் மாலாவின் மானியத்தில் மாதம் இருபது ரூபாய் கட்டிவிடுவதென்று ஒப்பந்தம் செய்து கொண்டு பெண்களுக்கான ஒரு சைக்கிள் வாங்கி வந்தான். தானே கூட இருந்து மாலாவுக்குக் கற்றுக் கொடுத்தான். சைக்கிளில் சௌகரியமாகப் போவதற்குப் பைஜாமாவும் வாங்கிக் கொடுத்தான். மாலா சைக்கிளில் அழகாகப் போவதைப் பார்த்துச் சாரதாவுக்கும் ஆனந்தம். பள்ளிக்கூடத்தில் பல பெண்கள் மாலாவின் அதிர்ஷ்டத்தைக் கண்டு பொறாமைப்பட்டார்கள்.

இவ்வாறு மாலாவின் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தபோது விதி புகுந்து அதைப் பாழாக்கி விட்டது. ஒரு நாள் பள்ளியிலிருந்து மாலா வீடு திரும்பியபோது ஒரு லாரி திடீரென்று எதிரில் வந்தது. மாலா நடுங்கிவிட்டாள். லாரி டிரைவர் பிரேக் போட்டு நிறுத்த முயன்றான். ஆனால் சைக்கிளில் மோதிய பின்னரே அது நின்றது. மாலாவுக்கு நல்ல அடி. ஒரு கால் ஒடிந்து விட்டது. நெற்றியில் பெரிய காயம். பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்து அவளை அதே லாரியில் தூக்கிப் போட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்



"தத்தித் தத்தி நடந்து வரும்
சின்னப் பாப்பா...!"

— புகைப்படம் : எஸ். ராமமூர்த்தி

துச் சென்றனர். அவளுடைய பெற்றோருக்குச் செய்தி அனுப்பினர். சங்கரனும் சாரதாவும் பதறிக் கொண்டு ஓடினார்கள். டாக்டர்களும் நர்ஸ்களும் மாலாவை நன்றாகக் கவனித்தார்கள். ஆனால் ஒரு காலை வெட்ட வேண்டியதாகி விட்டது. நெற்றிக் காயத்தினால் பெரிய தழும்பு ஏற்பட்டு அவளுடைய, அழகிய முகத்துக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டது.

ஒரு மாதத்துக்குப் பிறகு மாலாவை வீட்டுக்குக் கொண்டு வந்தனர். அவள் பிழைத்து எழுந்ததே பெரிய பாக்கியம் என்று சங்கரனும் சாரதாவும் அவள் மீது இரு மடங்கு பிரியமாக இருந்தனர். ஆனால் மாலா துக்கத்தில் ஆழ்ந்தாள். "நான் உங்களுக்குப் பாரமாகி விட்டேன். செத்திருந்தால் கூட எவ்வளவோ மேல். கடவுள் மிகவும் கொடியவர்" என்று அழுதாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதே, மாலா. தெய்வத்தைப் பழிப்பது பாவம். உலகில் அதிருஷ்டமும், துரதிருஷ்டமும் மாறி மாறி வரும். ஏன் அப்படி வருகின்றன என்று நமக்குத் தெரியாது. கஷ்டத்திலும் கடவுளை நம்ப வேண்டும்" என்று சாரதா சமாதானம் செய்தாள்.


தன் மகளுக்கு நேரிட்ட ஆபத்தினால் சங்கரனுக்குத்தான் அதிக வருத்தம். பல நாட்கள் பைத்தியம் பிடித்தவன் போல் இருந்தான். தன் கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு அவனுக்குச் சமாதானம் சொல்லுவதே மாலாவுக்கு ஓர் ஆறுதல் அளித்தது.


சங்கரன் ஒரு நாள் சிந்தாமணி என்ற ஒரு சங்கீத வித்வான் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தான். சிந்தாமணி ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவன் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. அதன் காரணத்தைப் பரிவுடன் சிந்தாமணி விசாரித்தார். தன் மகளுக்கு நேர்ந்த விபத்தை அவரிடம் சொல்லி அழுதான் சங்கரன். அவர் மனம் உருகியது. வேலை முடிந்ததும் அவரும் சங்கரன் வீட்டுக்கு வந்து மாலாவைப் பார்த்தார். தன்னை அறியாமலே சிந்தாமணிக்கு அவள்மீது அன்பு பெருகியது. அவளுக்கு நல்ல குரல் என்று கண்டதும், பாட்டுக் கற்றுக் கொடுக்க ஒப்புக் கொண்டார். மூன்று வருடம் விடாமல் மாலா பயின்றாள். வேறு வேலையின்றிச் சங்கீதத்திலேயே ஈடுபட்டதால் தேர்ச்சி பெற்று அவளும் பெரிய பாடகியாகி விட்டாள்.


இப்போது சினிமாவில் பெயர் பெற்ற பின்பாட்டுக்காரியாகி விட்டாள் மாலா. ஆயிரக் கணக்கில் சம்பாதித்தாள். சங்கரனும் சாரதாவும் அவளைக் கவனிப்பதே தங்கள் வேலையாகக் கருதினர்.

"எனக்கு ஆபத்து வந்ததும் நன்மைதான். இல்லாவிட்டால் இதுமாதிரி சம்பாதித்து உங்களை முதிய வயதில் என்னால் பராமரிக்க முடியாமல் போயிருக்கலாம். என்னைத் திருமணம் செய்து கொடுத்து அனுப்பியிருப்பீர்கள். நான் கடவுளைத் தூற்றியது தவறு" என்று ஒரு நாள் மாலா தன் பெற்றோர்களிடம் சொன்னாள். சாரதா கண்ணீர் விட்டாள். "எனக்கு இந்தப் பணமெல்லாம் என்ன பிரயோசனம்? விபத்து ஏற்படாமலிருந்தால் எவ்வளவோ நன்றாகத்தான் இருக்கும். ஆயினும் கடவுள் கருணையுள்ளவர் என்பதை நீ உணர்ந்தது சரியே" என்றாள் சாரதா.

சங்கரன் ஒன்றும் சொல்லவில்லை. சாரதா சம்பாதிக்கும் பணத்தில் பெரும் பகுதியை ஏழைப் பெண்களின் உதவிக்குக் கொடுத்து வந்தான். விதியைத் தவிர்க்க முடியாது. ஆனால் எவ்வளவு கொடிய விதியையும் மதி[illegible] கொண்டு சமாளிக்கலாம். வாழ்க்[illegible]யைப் பயனுள்ளதாகச் செய்யலாம் என்பதற்கு மாலா ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினாள்.


பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு, இந்தா! உனக்கும் சந்துருவுக்கும் வாழைப் பழம்! சந்துருவை அழைத்துக் கொண்டு விளையாடப் போயிட்டு வா. சீக்கிரம் திரும்பிடணும்.
அவன் ரொம்ப சங்கோஜப் படுவான். ஜாக்கிரதை யாகப் பாத்துக்கோ பாலு!
இந்த வாழைப் பழத் தோலைக் கீழே போட்டு வேடிக்கை காட்டறேன் பார்....
ஐயோ.... அம்மாடி....!
பொடிப் பயலே, இதென்ன வேலை? உன்னை என்ன செய்யறேன் பார்?
சின்னப் பயல் கிட்டே ஏண்டா முறைக்கிறே? உன் ஜோடி கிட்டே காட்டு உன் வீரப்பை.
ஓ! அப்போ நீதான் என் ஜோடி. இந்தா இதை வாங்கிக்கோ...
விடாதே பாலு... நீயும் ஒரு கை பாரு...
பிறகு
"அது போல எனக்கும் ஒரு "காட்டபெல்ட்" வேணும்டா பாலு.
வாங்கித் தரேன். ஆனா, என்னை ஏதாவது வம்பிலே மாட்டி வச்சு டாதே, ஆமா.
டேய் கோபு, இந்தக் கத்திக்கு உன்னோட காட்டபெல்டைத் தரியா?
"ஷ்யூர்... உன் கத்தி ரொம்ப ஒஸ்தியாச்சே. இந்தா...


ஐயோ! டேய் சுந்து, என்னடா செய்யறே?
ஏன்டா, அந்தப் பொடியனை விட்டு உன் வேலைத் தனத்தைக் காட்டறியா?
போடா, அவன் உன்னை விளக்குக் கம்பம்னு நினைச்சுட்டான் போலே...
விடாதேடா பாலு அவனை அடிச்சு நொறுக்கு சொல்றேன்.
அதன் பிறகு
இது போல ஒரு வண்டி மட்டும் இருந்தா எத்தனை ஜாலியா இருக்கும்?
சரி, வீட்டுக்கு வா போகலாம். அந்த மாதிரி வண்டி எங்கிட்டே இருக்கு.
பாலு ரொம்ப 'ஸ்லோ'வாப் போறதுடா வண்டி. நீயும் ஏறிக்கோயேன்.
இந்த மேடு ஏறினப்பறம் நானும் ஏறிக்கறேன். சரிவிலே வண்டி வேகமாக ஓடும்.
சுந்து, ஜாக்கிரதை. மேட்டிலிருந்து பள்ளத்துக்குப் போறது வண்டி.
இந்தக் கட்டை எதுக்கு? உட்கார இடைஞ்சலா இருக்கு.
ஐயையோ! அது 'பிரேக்' கட்டைன்னு. அதைப் பிடுங்கி எறிஞ்சுட்டியேடா!
ஹா... ஹா... எனக்குத் தெரியும் பாலு. அது இல்லாததாலே வண்டி என்ன வேகமாப் போறது பார்.
நான் இறங்க வேண்டிய இடம் வந்தாச்சு. குதிச்சுடறேன்!
ஆண்டவா! வண்டி கருப்பனோட ஆட்டுக்கிடையை நோக்கிப் போறதே. என்ன ஆகப் போறதோ! கடவுளே....!
சுந்துக் கண்ணு! உன்னை எங்கெல்லாம் தேடறதுடா, என் ராஜா!
பாலு! இதென்னது? சுந்துவை என்ன பண்ணினே?
ஹி... ஹி... ஹி... ஹா... ஹி... ஹி... ஹி...!



சுண்டு குண்டு சீமாத்தாத்தா

.சாமா.

சுண்டுவுக்கு அன்று பிறந்த நாள். ஆகவே குண்டுவுக்குமாகச் சேர்த்துச் சீமாத் தாத்தா ஒரு புத்தம் புதிய கிரிக்கெட் பந்தைப் பரிசாகக் கொடுத்தார். புதுப் பந்தினால் விளையாடும் நினைவாகவே குண்டுவும் சுண்டுவும் பள்ளிக்குச் சென்றார்கள். வகுப்பிலும் அவர்களுக்கு அந்த நினைவுதான். எப்போது மாலை வரும், மைதானத்துக்குப் போய் விளையாடலாம் என்று துடிப் போடு காத்திருந்தார்கள்.

ஒரு வழியாக மாலை மணி அடித்தது. அதே சமயம் தலைமை ஆசிரியரிடமிருந்து அழைப்பும் வந்தது சுண்டுவுக்கு. அவனிடம் ஓர் ஒட்டிய கவரைக் கொடுத்து அதைச் சீமாத் தாத்தாவிடம் கொடுக்கும்படி கூறினார். சுண்டுவுக்கு மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. "கடிதத்தில் என்னைப் பற்றி எழுதி யிருக்கீங்களா ஸார்?" என்று கேட்ட சுண்டுவின் குரல் கம்மிப் போயிருந்தது.

"ஆமாம்" என்றார் ஹெட்மாஸ்டர். பாவம், சுண்டுவுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது. உடல் துவளக் கடிதத்துடன் வெளி வந்த சுண்டுவை எதிர் கொண்டான் குண்டு. "என்னடா கடிதம்? ஏன் இப்படி ஓய்ந்து போய் வரே?" என்று கேட்டான் குண்டு. சுண்டு நிலைமையை விளக்கியதும், குண்டு, "சரித்தான் விட்டுத் தள்ளுடா. இதைப் போய்ப் பெரிசா நெனைச்சுக்கிட்டு... வாடா புதுப் பந்திலே ரெண்டு சிக்ஸர் அடிச்சா எல்லாம் சரியாய்ப் போகும்" என்று கூறி உற்சாகப்படுத்திச் சுண்டுவை இழுத்துக் கொண்டு மைதானத்துக்கு ஓடினான் குண்டு. புதுப் பந்தின் நினைவு சுண்டுவின் கடிதக் கவலைகளை மறக்கச் செய்தது.


பாழாய்ப் போன புதுப் பந்துக்கு என்ன குஷியோ தெரியவில்லை. அது ஹெட்மாஸ்டர் அறையின் ஜன்னலைப் போய்த் தொட்டு விட்டு உருண்டது. கலகலவென்று கண்ணாடிகள் சிரித்துச் சிதறின. ஓடியிருந்த கவலையும் பயமும் மறுபடியும் இருவரிடமும் வந்து ஒட்டிக் கொண்டன. புதுப் பந்தைப் பொறுக்கிக்கொண்டு வீட்டுக்கு ஓடினார்கள். "டேய் குண்டு, ஹெட்மாஸ்டர் தாத்தாவுக்கு என்னடா எழுதியிருப்பார்?" என்றான் பரிதாபமாக.

"டேய், நான் ஓர் ஐடியா சொல்றேன். ஆனா அது தப்புத்தான். ஆபத்துக்குத் தோஷமில்லேன்னு செய்ய வேண்டியதுதான்" என்று கூறிச் சமையலறைக்குப் போனார்கள். அவர்கள் அம்மா காப்பிக்கு ஜலம் வைத்திருந்தாள். அது கொதித்துக் கொண்டிருந்தது. "இந்த நீராவியில் கவரைக் காட்டினால் ஒட்டப்பட்ட இதைச் சுலபமாகப் பிரித்து விடலாம். விஷயத்தைப் படித்துத் தெரிந்து கொண்டு மறுபடியும் ஒட்டித் தாத்தாவிடம் சேர்ப்பித்து விடலாம்" என்றான் குண்டு.

அவர்கள் கவரைப் பிரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது பின்னாலே தாத்தாவின் குரல் கிறீச்சிட்டது. "பயல்களா, இதென்ன வேலை? அது என்ன கவர்? ஹெட் மாஸ்டர் கொடுத்தாரா?" என்று கேட்டபடியே அதை 'லபக்' என்று பறித்துக்கொண்டார். சுண்டுவும் குண்டுவும் திருதிருவென்று விழித்தபடி நின்றார்கள்.

"சுண்டுப் பயலே, உன்னைப் பற்றி ஹெட்மாஸ்டர் பிரமாதமாகப் புகழ்ந்து எழுதியிருக்காரே! நீ படிப்பில் சூரனாக இருக்கியாம். குட், இன்று உன் பிறந்த நாளில் இந்தப் பாராட்டு வந்தது எனக்கு எத்தனை சந்தோஷம் தெரியுமா?" என்று தாத்தா கூறிக் கொண்டிருக்கும்போதே அங்கு ஹெட்மாஸ்டர் வந்து நின்றார். அவர் முகத்தில் அனல் பறந்தது. "உங்கள் பேரன் என் அறை ஜன்னல் கண்ணாடியை உடைத்ததற்கு அபராதம் ஐந்து ரூபாய் கட்ட வேண்டும்" என்றார்.

சீமாத் தாத்தா சுண்டுவையும் குண்டுவையும் பார்க்கத் திரும்பினார். அவர்கள் ஏன் அங்கு இருக்கிறார்கள்? "ம்...ஒரு விநாடி சந்தோஷமா இருக்க விடல்லியே நீங்க. என்ன உலகமிது?" என்றார் ஹெட்மாஸ்டரிடம் ஐந்து ரூபாயை நீட்டிக் கொண்டே. தாத்தாவின் பார்வையை ஹெட் மாஸ்டரால் தாங்க முடியவில்லை.



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

பசி பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதி வேலையைத்தான் செய்யும்

*

இன்க்ரிமின் பெறுவீர்..

உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்





*

சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு... வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!

பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரதச் சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.

◀ பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.

இன்க்ரிமின்*

டானிக் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.

* அமெரிக்கன் ஸையானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஏடாஸ்-INC, 22 - 140 TM

REGISTERED NO. M. 9040